ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப் பிரதிவிலை | வெளி நாடு 0-1-6 / உள் நாடு 0-1-0

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	—	ரூ. 3—0
6-மாத சந்தா ,,	—	,, 1-12
வெளி நாட்டிற்கு ,,	—	,, 4—0

வாரப்பதிப்பு.

ஆசிரியர் ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | ஈரோடு, சுக்கில ஹூ மாசி மீ 5 உ (16—2—1930) ஞாயிற்றுக்கிழமை | மலர் 38

சென்னை, திருச்சி, மதுரை, கொழும்பு முதலிய பல இடங்களில் நடைபெற்ற வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும், அரசாங்க அதிகாரிகளாலும் பரீட்சிக்கப்பட்டு முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்க பதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்று பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்.

[ஓர்யோகீஸ்வரரின் அநுபவ முறைப்படி தயார்செய்யப்பட்டது.]

உலகப் பிரசித்தி பெற்ற

மஹா சந்தனாதித் தைலம்.

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண்பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு. கண்ணில் நீர்வடிதல், கண் பூ. பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல், காதுமந்தம், மண்டை குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டை சூடு, திரேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

ஒரு முறை இந்தத் தைலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபாரிசு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒருமுறை பரீட்சித்துப் பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4. 12 அவுன்ஸ டின் ரூ. 2—2—0

சலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கைகால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொப்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விருத்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும், சுறு சுறுப்பையும் உண்டாக்கும். எவ்வளவு கடின வேலை செய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும்; சாபபிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீர்ணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்றுவலி, அஜீர்ணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், நாவரோசிகம், மயக்கம், கை கால் குடைச்சல் முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்.

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது: சாப்பிட மதுரமுள்ளது. பாலர் விருத்தாப்பியர் யாவரும் ச்சாப்பிடலாம்.

ஒரு சேர். டப்பி விலை ரூ. 2.

குழந்தை மருந்துகள்.

கோரோஜனை மாத்திரை பாட்டல் அணா 8. கஸ்தூரி மாத்திரை பாட்டில் அணா 8. கட்டுவாதி மாத்திரை அணா 8. காரமாத்திரை அணா 8. சுகபேதி மாத்திரை அணா. 8. க்ரப்பான் எண்ணெய் ரூ. 2—0—0 மாந்தக்குடோரி எண்ணெய் ரூ. 1—0—0.

இன்னும் வல்லாவித நோய்களுக்கும் மிகவும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்.

எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனமாய் அனுப்பப்படும்.

மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும்
கமிஷன் ஏஜெண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,
தெப்பக்குளம்போஸ்டு, திருச்சினாப்பள்ளி

மதுரை முனிசிப்பாலிட்டி

டெண்டர் விளம்பரம்

1930—31-ம் வருடத்தில் இந்த முனிசிப்பாலிட்டியின் உபயோகத்துக்காக நிலக்கரி சப்ளை செய்வதற்கு முத்திரை வைத்த டெண்டர்கள் தேவை. மிகவும் உயர்ந்த நிலக்கரியாக இருக்கவேண்டும். அலிப்பூர் கவர்ன்மெண்ட் டெஸ்ட் ஹவுசிலிருந்து சமீபத்தில் கிடைத்த ரசாயன ஆராய்ச்சி சர்ட்டிபிக்கட் டெண்டருடன அனுப்பவேண்டும். நிலக்கரி தூசியில்லாதாக துப்புரவு செய்யப்பட்டு ரயில்வே வெய்பிரிட்ஜிலிருந்து சுமார் 3 மைல் தூரத்திலுள்ள கோச்சடையிலும், ஒரு மைல் தூரத்திள்ள ஆரப்பாளையத்திலுள்ள இரண்டு வாட்டர் வொர்க்ஸ் பம்பிங் ஸ்டேஷன்களிலும் கொண்டுபோய் டெலிவரி செய்யப்படவேண்டும்.

வருடம் முழுவதுக்கும் கோச்சடை ஸ்டேஷனுக்கு ஏறக்குறைய 700 டன் நிலக்கரியும் ஆரப்பாளையத்திலுள்ள ஸ்டேஷனுக்கு 400 டன் நிலக்கரியும் வேண்டியதாயிருக்கும்.

டெண்டர்களில், "1930—31-ம் வருடத்துக்கு நிலக்கரி சப்ளைக்கான டெண்டர்கள்" என்று மேற் குறிப்பு எழுதி ரூ. 100 கட்டணத் தொகையுடன் 25-2-30 மாலை 5-மணிக்கு முன்கிடைக்கும்படிகீழ்கையொப்பமிட்டவருக்குஅனுப்பவேண்டும். முனிசிப்பாலிட்டியிலிருந்து எந்த டெண்டர்தாரருக்காவது பணம்சேரவேண்டியதாயிருந்தால், கட்டணத்தொகையாக வைத்துக்கொள்ள ஒப்புக்கொள்ளபடமாட்டாது. ஒப்புக்கொள்ளப்பட்ட டெண்டர்தார் டெண்டர் ஒப்புக்கொள்ளப்பட்ட பதினறு தினங்களுக்குள் மேற்கொண்டு ரூ. 300 கட்டணத்தொகையாகச் செலுத்தி தமது சொந்த செலவில் இந்த ஆபீசிலிருந்து கொடுக்கப்படுகிற டிராப்ட் படி ஒரு கான்ட்ராக்ட் ஒப்பந்தம் எழுதிக்கொடுக்க வேண்டும். அந்த ஒப்பந்தப்படி செய்யத் தவறினல் கட்டணத் தொகை பறி முதல் செய்யப்படுவதுடன் காண்ட்ராக்ட்டும் ரத்துக் செய்யப்படும்.

எந்த டெண்டரையாவது அல்லது எல்லா டெண்டர்களையுமாவது காரணம் சொல்லாமலே தள்ளுபடி செய்ய கவுன்சிலுக்கு உரிமையுண்டு. ஒப்புக்கொள்ளப்பட்ட டெண்டர்தாரின் கட்டணத் தொகை ஷை சப்ளைக்காக பணம் கொடுக்கப்பட்டதற்குள்ள ரசீதுகளை ஆடிட்டர் பரிசீலனை செய்த பிறகு தான் திரும்பக் கொடுக்கப்படும்.

(ஒப்பம்) **ஆர். எஸ். நாயுடு,**
முனிசிபல் சேர்மன்.

முனிசிபல் ஆபீஸ,
மதுரை 27-1-30

சென்னிமலை குடிக்கும்தண்ணீர் கஷ்டம்

இவ்வூரில் சுமார் ஆயிரத்துக்கு மேல்பட்ட வீடுகள் கொண்ட மேஜர்யூனியனுக இருந்துவருகிறது, இவ்விடம் குடிக்கும் தண்ணீர் வசதி ரொம்பவும் கம்மி, வெயிற் காலங்களில் கிணறுகளில் ஜலம் இருப்பதில்லை, இருக்கப்பட்ட ஜலத்தையும் சரியான பாதுகாப்பில்லாமல் சீக்கிரம் அசுத்தப்படுகிறது, அதை உபயோகிக்கும் ஜனங்களில் பெரும்பாலும் நரப்பு சிலந்தி என்னும், கொடிய வியாதிக்கு ஆளாகி அவஸ்தைப் படுகிறார்கள், ஆகையால் யூனியன் போர்டாரும் பிரஜைகளும் சற்று கவனித்து இந்த கஷ்டத்தை நீக்கும் மார்க்கத்தை தேடுவார்களாக.

பிரிவுபசாரம்:— இவ்வூர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் திருவாளர் என், சிதம்பர முதலியார் பிரமோஷன் பேரில் பவானிக்கு மாற்றப்பட்டிருப்பதைக் குறித்து இவ்வூர் பிரமுகர்களால் 3-2-30 தேதி திங்கள் கிழமை மாலை 4 மணிக்கு டீபார்ட்டியும் மீட்டிங்கும் நடந்தது, திருவாளர் எஸ், கே, இராமசாமி முதலியார் அவர்கள், ஈ, ஆர். கந்தசாமிக் கவுண்டர் அவர்கள், ஈங்கூர் கே, வெங்கோபராவ், அவர்கள் தாவணப்ப செட்டியார் அவர்கள், எம், பழனியப்ப முதலியார் அவர்கள் வி. எஸ், மூருகேச முதலியார், என், சுப்ரமண்ய சாஸ்த்திரி [சப் ரிஜிஸ்ட்டிரார்] முதலியோர்கள் உள்பட பல பிரமுகர்களும் பொது ஜனங்களும் சுமார் 300-நபர்கள் விஜயம் செய்து இருந்தனர்,

நோட்டீஸ்.

மதுரை முனிசிபாலிட்டியைச் சேர்ந்த டோல் கேட்டுகளில் பீஸ் வசூல் செய்யும் பாத்தியதையையும், மற்றும் இதர குத்தகைகளையும், 1930 ஹு பிப்ரவரி மீ 24 உ திங்கட் கிழமை காலை 9மணிக்கு முனிசிபல் ஆபீசில் பகிரங்கமாய் ஏலம் விடப்படும்.

முனிசிபல் ஆபீஸ், மதுரை 3-2-30 | R. S. நாயுடு சேர்மன்.

கவலை ஏன்?

பிரதி மாதமும் வரும்படியுள்ள வியாபாரிகள், தொழிலாளர்கள், விவசாயிகள் முதலானவர்களுக்கு எந்த மாதத்தில் பணம் அவசரமேற்படுகிறதோ அப்போது பண அவசரத்தை நிவர்த்தி செய்துகொள்ளவும் ஏஜண்டாகயிருக்கிறவர்களுக்கு லெகுவாய் அளவிறந்த கமிஷன் கிடைக்கும் படியாயுமுள்ள நிபந்தனைகள் அடங்கிய புஸ்தகத்துக்கு உடனே எழுதினல் உடன் அனுப்பக்கூடும்.

மானேஜர்
தனலக்ஷ்மி கம்பெனி
திருநெல்வேலி
Tinnevelly (S-India)

WANTED.

Candidates for Telegraph and Station Master's Classes.

Full particulars and Railway Fare Certificate on 2 annas stamp.

Apply to:—
Imperial Telegraph College, Nai Sarak, Delhi 63

ஈரோடு டி. மு. கோர்ட்டு.

S. C. 1690/29.
I. A. 25/30.

மாரிமுத்து முதலி—வாதி.

ஈரோடு கிராமம் சுப்ப நாயக்கன் வலசிலிருக்கும் சின்னுக் கவுண்டன் மகன் முத்துக் கவுண்டன்—2-ம் பிரதிவாதி.

இதனுல் மேற்படி 2-ம் பிரதிவாதிக்கு தெரிவிக்கிறது என்னவென்றால்:—

மேற்படி நெம்பரில் வாதி, எண்டார்சு பெற்ற பிராம்சரிநோட் பேரில் செய்திருக்கும் தாவா (7-3-30) மார்ச்சு மாதம் 7-ந் தேதி வாய்தாப்போட்டிருக்கிறது. அன்றையதினம் நேரிலாவது, வக்கீல் மூலமாயாவது உனக்குள்ள ஆக்ஷேபணைகளைத் தெரிவித்துக்கொள்ளாவிடில் ஒரு கக்ஷி செய்து தீர்ப்பு பெற கோறப்படுமென்பதை இதன்மூலம்தெரிவித்திருக்கிறது.

C. P. ராகவேந்திர ராவ்,
வாதி வக்கீல் 8230.

குணம் இல்லையாயின் பணம் வாபீஸ்.

தேகாரோக்கியம்.

வைரத்திற்கு மேலானது!

நாராயண சஞ்சீவி லேகியமும்

அயத்தங்க செந்தூரமும்

இரத்தத்தை சுத்தி செய்து, நரம்புகளை முறுக்கேற்றி, தேக அழலையைப் போக்கி, சீதோஷ்ணத்தை சமனப்படுத்தி, ஆரோக்கியத்தையும் தாது விர்த்தியையும் உண்டாக்கி, சிற்றின்பத்தில் மிக மகிழ்ச்சியைத் தரும். துர் அப்பியாசத்தினுல் உண்டாகும் பலஹீனத்தைப்போக்கி அபாரமான ஞாபக சக்தியை உண்டாக்கும். 20-வகை மேகரோகங்களையும் போக்கடிக்கும்.

24-நாள் லேகியமும் அயத்தங்க செந்தூரம் புட்டி 1-ம் ரூ. 2—4—0
48-நாள் „ „ „ „ 2-ம் ரூ. 4—4—0

நாராயண சஞ்சீவித் தைலம்,—பச்சிலை மூலிகைகளாலும் பசும்பால் முதலிய பரிசுத்த வஸ்துக்களாலும் மிகச் சுத்தமாக செய்யப்பட்டன. தேக வரட்சியைப் போக்கி, மூளையைக் குளிரச் செய்து புத்திக் கூர்மையையும் ஆரோக்கியத்தையும் உண்டாக்கும். கடந்த 25 வருடகாலமாய் இதை ஆயிரக்கணக்கானவர்கள் வாடிக்கையாய்வாங்கிஸ்நானம் செய்து தேகாரோக்கியத்தோடு வாழ்ந்து வருகிறார்கள்.

5 பல டின் 1-க்கு விலை ரூ. 1—0—0

நாராயண திராட்சைப் பழ லேகியம்:—மலச்சிக்கலே எல்லா வியாதிகளுக்கும் காரணம். இதனுல் நமது நாட்டில் கோடிக்கணக்கானவர்கள் அவஸ்தைப்பட்டு அதை சரியாய் கவனிக்காமையினுல் அநேக வித நோய்களுக்கு ஆளாவதை நாம் நேரில் பார்த்திருக்கிறோம். அதற்கு இது திவ்வியமான மருந்து. சாப்பிடுவதற்கு மிக ருசியாய் இருக்கும். இரவில் படுத்துக்கொள்ளும்போது ஒரு கேச்சக்காய் பிரமாணம் சாப்பிட்டு படுத்துக்கொண்டால் காலையில் மலம் தாராளமாய்ப் போய்விடும். யாதொரு கெடுதலுமில்லை. தேகம் ஆரோக்கியமாயிருக்கும்.

டப்பி 1-க்கு விலை ரூ. 1—0—0

எல்லாவற்றிற்கும் தபால் செலவு வேறு. வெளிநாட்டன்பர்கள் தபால் செலவு சேர்த்து முன்பணமாக அனுப்பவேண்டும்.

ஸ்ரீ நாராயண மேடிகல் ஹால், காஞ்சீபுரம்.

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையோர்களுக்கு.

கைவல்யம்.

மீன மேஷ ரிஷபத்தைத் தின்பவர்கட்கு மிதுனத்திற்கு மேற்பட்ட தத்துவம் புலப்படாதென்று உங்கள் சபை 46வது ஆண்டு நிறைவு விழாவிற்குத் தலைமை வகித்தவர் சொன்னதை நீங்களும் கேட்டிருப்பீர்கள். "நவசக்தி" யில் நானும் படித்தேன். அதற்கு பதில் முன்வியாசத்தில் "குடி அரசு"லும் எழுதி அதில் விட்டதை இந்த வியாசத்திலும் சொல்லுகிறேன். "குடி அரசை"க் குற்றம் சொல்லுகிறவர்கள் படித்து ஆலோசித்துப்பார்த்து குற்றம் சொல்லட்டும்.

மீனமேஷ ரிஷபங்களைத்தின்பவர்கட்கு மிதுனத்திற்கு மேற்பட்ட தத்துவம் புலப்படாதென்று சைவசித்தாந்த சபைத்தலைவர் ஆலோசனையில்லாமல் சொன்ன பொருப்பற்றவார்த்தையை சிலர் நினைத்துப்பார்த்து வருத்தப்பட்டும், ராசியின் அடுக்கு வார்த்தையைக்கேட்டு சிலர் சந்தோஷப்பட்டும், சைவத்திற்குப் பொருந்தினவார்த்தை யென்று சிலர் மகிழ்ந்தும், வார்த்தையோடு வார்த்தையாக சிலர் புத்தி பற்றாமலும் அன்று சபையோர்களிருந்திருக்கலாம். இன்று அதை நீங்கள் ஆலோசித்துப்பார்க்கும்படி உங்கள் ஞாபகத்திற்குக்கொண்டுவருவதற்காகவே மீனமேஷ ரிஷபங்களைத் தின்கின்றவர்களுக்கே எல்லாத்தத்துவங்களும் புலப்பட்டிருக்கிறதென்று முன் வியாசத்திலெழுதியும் மிதுனத்தைப்பற்றின தத்துவங்களை இந்த வியாசத்திலும் இதற்கு அடுத்த வியாசத்திலும் எழுதுகிறேன்.

பார்வைக்குப் பல முள்ளனபோல் தோன்றும் காரணத்தால் அழிதற்கு அசாத்தியமாகிய பழங்காலத்து ஐரோப்பிய மத நம்பிக்கைகள் தற்கால பௌதீக விஞ்ஞான சாஸ்திரப்பிரகாசத்தின் வன்மையால் நிர்த்தூளியாய் வருகின்றது. தம்தம் கொள்கைகளே உண்மையெனச்சாற்றிவந்த சமயவாதிகளின் கக்ஷிவாதங்கள் சின்னபின்னமாகத்தகர்ந்து காற்றில் பறந்தோடுகின்றன. இக்காலத்தில் செய்யப்படும் தத்துவ ஆராய்ச்சி யென்னும் சம்மட்டி அடிகளால் பலவகைப்பட்ட பண்டைக்காலத்து மூடப்பிடிவாத மதங்களெல்லாம் நொத்துண்டு மண்பாண்டங்களைப்போற்படு சூரணமாய் மறைந்து போகிறது. இக்காலத்தில் மேற்றிசையிலும் கிழக்குப் பலபாகங்களிலும் மதத்தையனுசரிப்பது மந்த புத்திகளின் இயல்பெனக்கருதப்படுகின்றன. மேற்றிசையில் தெளிந்த புத்தியுள்ளவர்கள் மதத்தின் சம்பந்தம் பெற்ற சகலத்தையும் இழிவாய்க்கருதுகிறார்கள். அவர்களால் பல ஏடுகள் எழுதியுமிருக்கிறது எழுதப்பட்டும் வருகிறது. நம்மில் ஆங்கிலம்படித்தவர்களில் அரையே அரைக்காலும் அதையே படிக்கிறார்கள். ஆசாரம் போயிற்று. அனுச்சாரத்திற்கு அகராதியில் அர்த்தமில்லை. அறவொழுக்கம் பிரசங்கிக்கே அர்த்தமாவதில்லை. இவ்விதமாக இருக்கும் இக்காலத்தில் உலக வியற்கையின் விதிகளுக்கெல்லாம் தலையாக, ஒவ்வொரு அணுவினுக்கும் சக்திக்கும் உள்ளும் புறத்தும் எங்கும் வியாபித்துள்ள ஒருவன் உளனென்று சொல்லும் இந்து சமயங்களின் பகுதிகளிலொன்றாகிய சைவ சமயத்திலே அவருண்மை விளங்குமென்னும் சைவசித்தாந்தத்தின்உண்மை தத்துவங்களை எடுத்துச் சொல்லும் அதன் தலைவர்கட்கு விசால நோக்கமும் விரிந்த அறிவும் மதக்கருத்துக்களை அறியும் சிந்தனை சக்தியும் வேண்டுமென்பதை நீங்களும் அறிவீர்கள் பணத்திலும் இங்கிலீஷ் சட்டமுத்திரையிலும் சமய சபைத்தலைமையை நிறைக்க சிறப்பந்த மேற்பட்டிருக்கையில் எதை உணர்ந்தும் என்ன பயன் என்றாலும் சைவ சபைத்தலைவர் பதவியை வகிப்பவர்கள் விரிந்த மனத்தால் சைவ சமய தத்துவங்களை விளக்கிச் சொல்லவேண்டும். குற்றம் சொல்லுகிறவர்களைக் கண்டிக்க ஏற்பட்டால் அதற்குத் தகுந்த ஞாயங்கள் சொல்லவேண்டும். அதற்குச் சொல்லவேண்டிய நியாயங்களோ சமயங்களில் மலிந்து கிடக்கின்றன. அந்த நியாயங்களைச் சொல்லுகையில் உண்மை அறிவிற்கும், பொதுத்தெய்வகட்டளைக்கும், உலகப் பொதுவிதிக்கும் ஒத்ததா என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். இதையெல்லாம் விட்டு விட்டு குறுகிய மனத்தின் அசூயை குணத்தால், ஜாதி உயர்வால், தனக்குள்ள மற்ற பெருமையால், பார்ப்பனர்கள் தன்னைப்புகழ்வதால், அவர்கள் சிநேகிதத்தால், நியாயமில்லாத வார்த்தைகளைச் சொல்லி சமயப்பேரால் மற்றவர்களைத்தாழ்த்திக்காட்டுவதை சுயமரியாதைச்சங்கம் ஒத்துக்கொள்வதில்லை.

பிரகிருதியை இயங்குவிக்கும் சக்தியின் தற்கால கதியாது? வருங்காலத்தில் இது எவ்வாறு? இருக்கும்? உற்பத்தியில் இதன் நிலைமை என்னவாயிருந்தது? என்று இவ்வாறெல்லாம் நன்கு விசாரணை செய்த மனதால் "சத்தல்ல" "அஸத்" ஆகும். இப்பிரபஞ்ச மூடியால் நம்அஞ்ஞான முகத்தை மூடிக்கொள்ளுகிறோமேயன்றி வேறில்லை என்று தெரிந்து தத்துவ நூல்களிலேனும் விஞ்ஞான ஏடுகளிலேனும் சித்துகாண முடியப்படாதது ஸ்தூலப்பிரபஞ்சத்தில் ஓங்கும் சட்டத்தின் ஆட்சியில் சித்து எங்ஙனமும் தலைகாட்டாது. அங்கு நடக்கும் ஒவ்வொன்றுக்கும் வரையறுக்கப்பட்ட காரணங்களுண்டு. காரணங்கடந்த ஒன்று அங்கு காணவே முடியாது. அது பிரகிருதியின் நடையையும் செயல்களையும் நம் அஞ்ஞான மனக்கண்ணாடியின் வழியே பார்த்ததாகுமேயன்றி உண்மையொளியில் நின்றும் விஷயவிசாரணை செய்ததாகாதென்னும் இவ்விசாரணை முடிவில் திகழுங்காட்சியால் நம்முடன் பிறந்த தொந்தங்களும், மயக்கங்களும் அற்றுப்போய் விட்டனவா? ஸ்வபாவனையே நிலைத்து விட்டதா? எங்கு பார்த்தாலும் ஒரு ஏகப்பொருளே நம் திருஷ்டிக்குத் தென்படுகின்றதா? என்று பன்முறையும் சோதித்துப் பார்த்துச்சுத்தப்பரிசுத்தர்களாகி ஞானசாதனத்தினால் மும்மலங்களற்று ஏகாக்கிரசித்தமுடையவராகி நிர்விகற்பசமாதியில் ஆழ்ந்திருக்கப்பட்டவர்க்ள் அதற்கு ஆசைப்பட்டு அதன் வழியே பக்தி செய்கிறவர்கள் எச்சமயத்தவர்களாக விருந்தாலும் அவர்களை குற்றம் சொல்ல வந்ததல்ல சுயமரியாதை இயக்கம் என்பதையும்,

நாம் செய்யும் நன்மை தீமைகள் ஸத் சங்கங்கள் அஸத்சங்கங்கள் ஆயவெல்லாம் நமது சரீரத்தின் பித்த நாடியின் கதியே பொறுத்திருக்கின்றது. என் சரீரம் தோன்றுவதற்கு ஆதாரமாயிருந்த ரேதஸவின் தன்மையே பொறுத்திருக்கின்றது பஞ்சபூதங்களினுடைய ரஸாயனச் சேஷ்டையின் அளவேயாகும் நமது மூளை அதிசூட்சுமமான மின்சார அணுக்களாலாக்கப்பட்ட பல்லாயிரம் அறைகள் கொண்டதோர் பெட்டியேயாகும் அவ்வறைகளின் அளவையும் அவை அமைந்து நிற்கும் இடத்தையுமே பொறுத்து நிற்கின்றது என்பவைகளின் சித்தாந்தங்களைக்கொண்டு இப்பிரபஞ்சகாரியங்களனைத்தையும் அறிந்து எல்லை கட்டி விடும் சார்வாகர்களுக்கு உதவிசெய்ய வந்ததுமல்ல சுயமரியாதையியக்கம் என்பதையும் உங்களெல்லாருக்கும் தெரியப் படுத்திக் கொள்ளுகிறேன்.

ஸர்வ அனுபோகமாகிய இப்பிரபஞ்ச சக்தியையும் பிரபஞ்சத்திற்கும் காலத்திற்கும் எட்டமுடியாத அகண்டமாய் நிற்கும் சக்தியையும் அச்சக்தியின் ஒழுங்குகளையும் அதனாலுண்டாகும் காரியங்களையும் பூரணமாக அனுபவிக்க தனித்தனி மனிதருக்கும் உயர்ந்த ஜாதிக்காரர்களுக்கும் எப்படியோ அப்படியே ஜனசங்கத்திற்கும் பொருந்து மென்றே சுயமரியாதை இயக்கம் சொல்லுகிறது. இக்காலத்தில் உயர்ந்த ஜாதிக் காரர்களென்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் சமயமென்னும் வியாஜம்வைத்துக் கொண்டு தத்தமக்குள்ள லௌகிக ஜன சங்க சம்பந்தமான அபீஷ்டத்தையோ ராஜ்ய தந்திர சம்பந்தமான அபீஷ்டத்தையோ ஈடேற்றிக் கொள்ளப் பார்ப்பவர்களைக்கண்டித்து மதத்திற்குச் சாத்தியம் மதமேயன்றி அது மற்றொன்றுக்கு சாதனமாயிருத்தல் தகாது என்றே சொல்லவந்திருக்கிறது.

நமக்குச் சமயப்பெருமைகள் எத்தனையிருந்தாலும் அத்தனையையும் அனுபவிப்போம். இப்பிரபஞ்சத்தை மற்ற சமூகங்களறிந்து அனுபோகமடைந்திருப்பது போல நமது சமூகங்களுமறிந்து காக சிருஷ்டியின் கரை தலை விட்டு மேற்கிலுள்ளாரும் கிழக்கிலிருந்தநமதுமுன்னோர்களும் அங்கீகரித்த சமத்துவத்தையும் சமூக அன்பையும் அடைந்து நம் தத்துவ சாஸ்திரங்களின் முடிவில் நம் பெரியவர் கண்ட உண்மையில் நாம் ஆசை கொண்டது போலவே உலகத்திற்கு வேண்டிய சாஸ்திரங்களிலும் நடக்கைகளிலும் ஆசை வைத்து சட்டமும் ஒழுங்கும் தனியரசு செலுத்தும் இப்பிரபஞ்சத்தில் நாம் கவனத்தைச் செலுத்தாவிட்டால் நமது சமய சத்திய நெறியும் போய் நமது கூட்டமும் குறைந்து நாம் ஒரு வேளை கஞ்சிக்கும் ஒரு பெண்ஜாதியை திருப்தி பண்ண ஒரு நாகரீகச்சீப்பிற்கும் குழந்தைப்பாலுக்கும் குழந்தைகள் விளையாடும் கருவிகளிலொன்றான ஒரு பந்துக்கும் அவர்களைப் பயிற்சி செய்விக்கும் பள்ளிக்கும் அவர்கள் படிக்கப் பத்துப்பணத்திற்கும் பரிதவிக்கும் நிலைக்கே வந்து கொண்டிரும்போம் என்பதை சமயவாதிகளின் ஞாபகத்திற்குக் கொண்டு வருவதற்கே சுயமரியாதை இயக்கம் தோன்றியிருக்கிறது.

இப்பிரபஞ்ச காரியங்கள் தேவன் அல்லது அதிஷ்டம் விதி என்றும் எவ்வித ஒழுங்குமின்றி விளையாடித் திரியும் பல தேவதைகளின் காரியங்களென்றும் அவைகள் தெய்வத்தன்மையுடையனவென்றும் அவைகள் பூசனைகளையும் லஞ்சங்களையும் கைநிரம்பப் பெற்றுக் கொண்டு நமது குறைகளைக் களைந்து களிப்பூட்டும் தகையாளரெனச்சொல்லி உண்மைக்கு நேர்விரோதமாக இடைவிடாமல் அதற்கே எல்லா முயற்சியும் செய்வது வீணென்று தான்சுயமரியாதை இயக்கம்சொல்லுகின்றது. நீங்களே ஆலோசித்துப்பாருங்கள் எத்தனையோ தெய்வங்கள் எத்தனையோ கோவில்கள் பூசைகள் ஆராதனைகள் இத்தனைகளும் அநேக நாளாக நமது நாட்டிலும் நம் சமூகங்களிலுமிருந்தும் நமது சமூகங்கள் அடிமைப்படும் வழியை அடைத்ததுண்டா? நமது சமூக வாழ்க்கைக்கு வேண்டிய சாமக்கிரிகைகளை யாவதளித்த துண்டா? அவைகள் பாரமார்த்தீகத்திற்குப் பயன்படாதவையென்று மிதுனத்திற்கு மேற்பட்ட தத்துவம் விளங்கின உங்கள் சபைத்தலைவர் சொல்லலாம். இது வெறும் சப்தம் இதில் ஆழம் ஒரு சிறிதும் கிடையாது. இரு

(தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)

1929-ஹு டிசம்பர்-மீ 21, 22, 23-உகளில் ஈபோவில் கூடிய

அகில மலாயா தமிழர் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்.

திரு. ஈ. வெ. ராமசாமியாரால் திறந்து வைக்கப்பட்டு டாக்டர் மகமதுகவுஸ் ஜே.பி. அவர்கள் தலைமையில் கூடியது.

1. இம்மகாநாடு மன்னர் பிரானின் நோயற்ற நீடித்த வாழ்விற்கு பிரார்த்திக்கின்றது.

2. இம்மகாநாடு மாட்சிமை தங்கிய பேரா சுல்தான் அவர்களின் நோயற்ற நீடித்த வாழ்விற்கு பிராத்திக்கின்றது.

3. இம்மகாநாடு இந்திய சட்ட சபையில் தீர்மானமாகி நிறைவேறிய சாரதா பால்யவிவாகத்தடை மசோதாவிற்கு ஆதரவளித்த இந்திய சட்ட சபை அங்கத்தவர்களுக்கும் அதைச் சட்டமாக்க அனுமதியளித்த கனம் ராஜப்பிரதிநிதி அவர்களுக்கும் நன்றியறிதலை தெரிவித்துக்கொள்வதுடன் மேற்படி தீர்மானத்தை இந்நாட்டிலும் அமுலுக்குக்கொண்டுவரும்படி அரசாங்கத்தினரை கேட்டுக்கொள்வதுடன் இவ்வரசாங்கச் சட்டசபைகளிலுள்ள கனம் அப்துல் காதர் அவர்களையும் கனம் வீராசாமி அவர்களையும் அதற்கான முயற்சிகள் செய்யக்கேட்டுக்கொள்ளுகிறது.

4. இம்மகாநாடு தமிழர்களின் திருமணவினைகள் சிக்கனமாகவும் தாய் மொழியிலும்நடாத்த வேண்டுமென அபிப்ராயப்படுகிறது.

5. இம்மகாநாடு அகில மலாயா தமிழ்சங்கத்திற்கு கொள்கைகளையும் விதிகளையும் புத்தகரூபமாய் தயாரிக்கும் படி காரிய நிர்வாகக்கமிட்டியாரைக்கேட்டுக்கொள்ளுகிறது.

6. இம்மகாநாடு விதவை மணத்தை ஆதரித்து ஒவ்வொருவரும் அதைக்கைக்கொள்ளுமாறு தமிழர் சமூகத்தைக்கேட்டுக் கொள்வதுடன் இவ்விவாகத்தை எஸ். எஸ். அரசாங்கம் சட்டமாக்கியுள்ளது போல் எப். எம். எஸ். அரசாங்கத்திலும் சட்டமாக்க வேண்டுமென அரசாங்கத்தைக்கேட்டுக்கொள்ளுகிறது.

7. தமிழ்மக்கள் சாவுகளிலும் பிரேத அடக்க காலங்களிலும் வேறு விசேஷ தினங்களிலும் தப்புகள், தம்பட்டங்கள் எனச சொல்லப்படும் வாத்தியங்களாவது அல்லது அவை போன்ற பழங்கால அநாகரீக வாத்தியங்களையாவது உபயோகிக்கும் வழக்கங்களை அறவே ஒழித்து காலத்துக்கும் தேசத்திற்கும் ஒத்து போவதுடன்வாத்தியங்களை உபயோகிக்காமல் தங்கள் விசேஷங்களை நடத்திக் கொள்ளும்படி இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

8. இந்தியா, இலங்கையிலிருந்து வந்து இந்நாட்டில் தொழில் வர்த்தகம் முதலிய துறைகளில் ஈடுபட்டு இருப்போர், ஆறு மாதங்களுக்கு மேல் இங்கு வசிப்பதாயின் தமது மனைவி மக்களை வரவழைத்துக் குடும்ப சகிதமாய் வாழுதல் சுகத்திற்கும் கௌரவத்திற்கும் ஏற்றதாகக்காணப்படுவதினால் தனிமையாய் ஆண்டுகணக்காய் இந்நாடு வதிவோர் இது பற்றிச் சிந்தித்து இத்தீர்மானத்தைச் செயலளவில் கொண்டுவர முற்பட வேண்டுமென்று இம்மகாநாடு வினயமாய் சிபார்சு செய்கிறது.

9. மலாய் நாட்டிலுள்ள தமிழ்மக்கள் அனைவரும்தமக்குள்நாட்டுவேற்றுமை முதலியஎத்தகைய வேற்றுமைகளையும் கொண்டாடாது தாய் மொழிப்பற்றில் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் எல்லாத்துறைகளிலும் வாழ்க்கை நடத்தும்படியும், தங்கள் முன்னேற்றங்களை நன்கு அமைத்துக்கொள்ள ஒன்று சேர்ந்து உழைக்கும்படியும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

10. அகில மலாயா தமிழர் மகாநாடு கூட்டியதின் நோக்கம் தமிழ் மொழி பேசும் வகுப்பினர்களின் சமூக சீர்திருத்திற்காக கூட்டப்பட்டதேயன்றி, தமிழ் நேசன் இந்தியன் பையோனியர், இந்திய மித்திரன் ஆகிய பத்திரிகைகளின் பொய் பிரசாரத்தில் கண்டபடி வரைந்து, சிங்கப்பூரில் கூடும் அகில மலாயா இந்தியர் கான்பரன்ஸிற்கும் ஏனைய கூட்டத்தார்க்கும் விரோதமாகக்கூட்டப்பட்டதாக கூறியது தவறென்றும் இம்மகாநாடு தெரிவித்துக்கொள்ளுகிறதோடு அப்பத்திரிகைகளைக்கண்டித்து அவைகளை ஆதரிக்காதிருக்கும்படியும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

ஓர் வேண்டுகோள்.

50 வருஷத்திற்கு முன் சுயமரியாதை இயக்கம்.

சுமார் 40, 50 வருஷத்திற்கு முன் பதிப்பித்ததும், **இந்து மத** ஆச்சார ஆபாச தரிசினி என்ற பெயர் கொண்டதும், 762 பாடல்களை உடையதும, கிரௌவுன் ஒண்ணுக்கு எட்டு சைசில் 120 பக்கங்களை உடையதுமான ஒரு தமிழ் புத்தகம் எங்கேயாவதும், யாரிடத்திலாவதும் கிடைக்குமானால் தயவுசெய்து வாங்கி உடனே நமக்கு அனுப்பிக்கொடுக்கும்படி வேண்டிக்கொள்ளுகின்றோம்.

ஏனெனில் அப்புத்தகம் ஒன்று நமக்கு ஒரு மாதத்திற்கு முன் ஒரு நண்பரால் அனுப்பப்பட்டிருக்கின்றது. ஆனால் அது மிக்க பழயதாகவும் முதலிலேயே சில பக்கங்கள் இல்லாமலும் சில பக்கங்கள் கிழிந்து சரிவரத் தெரியாமலும் இருப்பதால் கிழியாத புத்தகம் ஒன்று வேண்டியிருக்கின்றது. அப்புத்தகம் நமது இயக்கக்கொள்கைகளையே முக்கியமாய் வைத்துப் பாடின பாட்டுகள் அநேகம் அதில் இருக்கின்றன

ஈ. வெ. ரா.

அகில மலாயா இந்தியர் மூன்றாவது மகா நாட்டில்

நிறைவேறிய தீர்மானங்கள்

ஆனரபிள் அப்துல்காதர் அவர்கள் தலைமையில் கூடியது.

சிங்கப்பூர்.

1. எல்லா இந்திய சங்கங்களும் இம்மகாநாட்டின் நிரந்தரக் கமிட்டி கூட்டுக் காரியதரிசிகளுக்கு ரேபின் ஸகலேஜுக்காக கிளிபோர்டு நிதிக்கு கொடுக்க வேண்டி நன்கொடைகள் அனுப்பி யுபகரிக்க கேட்டுக்கொள்ளுகிறது.

2. ஈப்போவில் கூடிய அகில மலாயா இந்தியர் இரண்டாவது மகாநாட்டில் தீர்மானித்தபடி இன்னாட்டுக் கள்ளுக்கடைகளை, விசேஷமாக தோட்டங்களிலுள்ள கள்ளுக்கடைகளை குறைக்க வேண்டியதற்கும் குடியை மட்டுப்படுத்த வேண்டியதற்கும் தீவிர முயற்சி எடுத்துக் கொள்ளும்படியும் தொடுவாய் நாட்டுச் சர்க்காரையும், ஐக்கிய மலாய் நாட்டுச் சர்க்காரையும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

3. இம்மகாநாடானது, ஒரு இந்திய தினசரி ஆங்கில வர்த்தமானப் பத்திரிகை ஆரம்பிக்க வேண்டியதற்காக ஒரு திட்டம் தயாரித்து கூடுமான சீக்கிரத்தில் அத்திட்டத்தை நிரந்தரக் கமிட்டியாருக்கனுப்ப ஒரு உருவகக் கமிட்டி நியமிக்க வேணுமென்று விரும்புகிறது.

4. ஐரோப்பியர்களல்லாத பிரிட்டிஷ் குடிகள் மலாய் சிவில் சர்விஸ உத்தியோகங்களுக்கு விலக்கப் பட்டதாகப் பிறந்திருக்கும் சர்க்கார் உத்திரவை மாற்றி எல்லா பிரிட்டிஷ் குடிகளுக்கும் அந்தச் சிவில் சர்விஸ உத்தியோகத்தைப் பெறும் பாத்தியதையிருக்கத்தக்கதாயும் வகுப்புப் பாரபக்ஷமில்லாதிருக்கத்தக்கதாயும் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்படி மேன்மை தங்கிய கவர்னரையும் ஹை கமிஷனரையும் இம்மகாநாடு கேட்டுககொள்ளுகிறது.

5. காலனியில் தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு உதவியவசித்தைப் பற்றி தீவிர ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும் மற்ற சமூகத்துள்ள வேலைக்காரர்கள் பெறும் நிவேதனத்தோடு ஒத்திட்டுப் பார்த்தால் இந்தியர்களுக்கு கிடைக்கும் நிவேதனம் பிரதிகூலத்தைத் தாத்தக்கதாயிருக்கிறதாகையால், சமத்துள்ள தொழிலாளர்கள் பேரில் சுமத்தப்பட்டிருக்கும் வரிப்பளுவை எடுத்துவிடவேண்டுமென்று மலாய் நாட்டு சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

6. இந்தியா கவர்ண்மெண்டிலிருந்து வரப்போவதாக எதிர்பார்க்கப்படும் தோழிலாளர் பரிசிலனைக் கமிட்டி பிரதிநிதிகளின் யாதாலதிற்குத் துணையாக மலாயாவிலிருக்கும் இந்தியர்கள் சம்மந்தமாக விரிவான யாதாலது தயாரித்து அப்பிரதிநிதிகளுக்குக் கொடுக்க 9 பேர்களடங்கிய கமிட்டியொன்று நியமிக்கத்தக்கது.

7. ஐக்கிய மலாய்நாட்டிலும்தொடுவாய் நாட்டிலும் உள்ள இந்திய இமிகிறேஷன் கமிட்டியில் குறைந்தது ஒரு இந்தியர் வீதம் நியமிக்க இம்மகாநாடானது மேன்மை தங்கிய கவர்னர் ஹை கமிஷனரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

8. மலாயாஇந்திய வாலண்டியர் படையில் (யூனிட்ஸ்) ஒற்றைகள் அதாவது தனித் தொகுதிகள் இல்லாதிருப்பதால் தொடுவாய்ப் பகுதியிலும், ஐக்கிய மலாய்ப் பகுதியிலும் ஸ்தானங்களில் இப்போதிருக்கும் இந்திய வாலண்டியர்களைக்கொண்டே இந்தியர் வாலண்டயர் படைகள் நியமிக்கவேணுமாய் அந்தந்த சர்க்கார்களைக் கேட்டுகொள்ளுகிறது.

9. இந்திய கைத்தொழிற் சாமான்களின் கண்காட்சியென்று ஏற்படுத்தமுயற்சிஎடுப்பதும்அக்காட்சிசாலையில்இந்தியர்களால் செய்யப்பட்டபல பொருட்களும் வைக்கப்படத்தக்கது.

10. இந்த மகாநாட்டில் நிறைவேறிய பல தீர்மானங்களையும் அமுலுக்கு கொணடுவர வேண்டியதற்காக மலாயாவிலுள்ள பதினைந்து (15) இந்திய சங்கங்களிலிருந்தும் சங்கம் 1-க்கு இரண்டு பிரதிநிதிகள் வீதம் தேர்ந்தெடுத்து நிரந்தரக்கமிட்டியொன்று நியமிக்கத்தக்கதெனவும் அந்தப் பிரதிநிதிகளால் இரண்டு கூட்டுக் கௌரவ காரியதரிசிகள் நியமிக்கத்தக்கது.

குறிப்பு:— இம்மகாநாட்டில் திரு. ஈ. வெ. ராமசாமியார் நிகழ்த்திய சொற்பொழிவு முன் இதழில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இதிகாசங்கள்.

இராமாயாணம்—சுந்தரகாண்டம்

கட்டுரை—13

திரு. சந்திரசேகரப்பாவலர்)

(சருக்கங்கள் 48 முதல் 52 முடிய)

இந்திரசித்தன் அனுமானை இழுத்துக்கொண்டு போய்இராவணனுக்குக் காட்டினான். கொடிய அரக்கரால் அங்குமிங்கும் இழுக்கப்பெற்ற அனுமானை இராவணன் பார்த்தான். அவன் தன்னுடைய குலத்தாலும் வயதாலும் முதிர்ந்த அமைச்சரை நோக்கி ஆணைதர அவர்கள் "யார்?" என வினவ, அனுமான் "நான் சுக்ரீவமன்னனுடைய தூதன்" என மறுமொழி கூறினான்.

அனுமான் தான் நினைத்ததற்கு மாறாக இராவணன் இருந்த இடத்திலிருந்தே தன்னைக் கட்டிக்கொண்டுவரச்செய்த பெருமையை நினைந்து அனுமான் ஆச்சரியப்பட்டான். அமைச்சர்கள் சூழ கண்கள் கூசும்படி பேரொளியுடன் அரியணைமிசை அமர்ந்திருந்த இராவணனைப்பார்த்து அரக்கர் தனனை அடித்துத் துன்புறுத்துவதையும் மறந்து அனுமான் மிகவும் ஆச்சரியப்பட்டு, "இவன் கோபங்கொண்டால் இந்த உலக முழுவதையுமே நசுக்கிக்கடலில் தூற்றிவிடக்கூடியவன்" என்று சிந்தித்தான்.

இராவணனுடைய ஆணையின்படி அமைச்சன் பிரகத்தன், "நீ இங்கே எதற்காக வந்தாய்? உண்மையைச் சொல்" என வினவினான். அனுமான், "என்னைத் திருமால் முதலிய தேவர் அனுப்பவில்லை. நான் அரக்கர் மன்னனைப்பார்க்கும் பொருட்டு இங்கே வந்தேன். அதற்காக அசோகவனத்தை அழித்தேன். அரக்கர் என்னை வந்து துன்புறுத்தினர். என் உடலைக்காக்க நான் அவர்களைக் கொன்றேன். நான் நான்முகனிடம் வரம்பெற்றவன். அரக்கர்கோனைப்பார்க்கும் நோக்கத்தாலேயே நான்முகன் கணைக்குக் கட்டுப்பட்டதோடு அது விடுபட்டபின்னும் கட்டுப்பட்டவன் போல் பாவனைபண்ணிவந்தேன். ஒரு அரச காரியமாக இராமனாலே அனுப்பப்பட்டேன். இலங்கைக் கிறைவ! கிட்கிந்தை மன்னர் சுக்கிரீவன் என்னைத்தங்களிடம் அனுப்பினார். தன் மனைவியாகிய சீதையை இழந்த இராமன் தன தம்பியுடன் வந்து வாலியைகொன்று சுக்கிரீவனுக்கு முடி சூட்டினார். சீதையைத் தேடி வந்த பலரில் நான் இங்கு வந்து அவளை உன் வீட்டில் கண்டேன். அறம் பொருள் நன்கறிந்து கடுந்தவம் செய்து பல் வரம் பெற்ற பேரறிவாளாராகிய தாங்கள் அறத்திற்கு மாறாக பிறர் மனைவியை எடுத்து வந்தது சரியன்றல்லவா? ஆதலின் அவளை இராமனிடம் கொண்டுபோய் விட்டுவிடும். குரங்கு கூறுகிறதென இகழவேண்டாம். என்னாலேயே எல்லோரையும் அழிக்க முடியுமென்றாலும் இராமன் தன் மனைவியைக்கைப்பற்றியவனைக் கொல்வதாக வஞ்சினம் கூறியிருக்கிறார். அவர் வலிமையில் திருமாலுக்கொப்பவர். ஆதலின் அவரைப்பகைக்கவேண்டாம்" என்று கூறினான்.

இராமன் சினம் கொண்டு, இந்தக் குரங்கைக்கொல்லுங்கள்" என்றான். அவனுடைய தம்பியாகிய வீடணன் "இக்குரங்கை இவன் கொன்றே விடுவான் தடுப்போம்" என எண்ணி இராவணனைப்பார்த்து, "தூதனைக் கொல்வது தங்களைப்போன்ற பெரியார்க்கு அழகில்லை" என்றான். இராவணன், "பாவிகளைக்கொல்வது பாவமாக இவனைப்போல் பாவி உண்டோ" என வினவினான்.

வீடணன், "இக்குரங்கு தூதனாயிருப்பதோடு அமையாமல் நமது அக்கன் முதலியோரைக் கொன்று பகைவனுமானான் என்றாலும், தூதர்களைத் தண்டிக்க கசையடியடித்தல், மொட்டையடித்தல், அங்கங்களைச்சிதைத்தல் போன்ற தண்டனைகளே நூல்களில் கூறப்பட்டிருக்கின்றன. ஒப்பற்ற ஞானியாகிய தாங்கள் இவனைக்கொல்லாகாது. இவனைக்கொல்வதிலும் இவனை அனுப்பியவர்களைக் கொல்லுதலே நலம். இவனைத்தவிர கடலைத்தாண்டி இங்கே வரும் ஆற்றலுடையார் ஒருவருமில்லை. அந்தத் தீயவர்கள் இங்கே வரமாட்டாமல் இருக்கிறார்கள். இவனை விட்டுவிட்டால் அவர்களை அழைத்துவருவான். நாம் அவர்களைக்கொல்லலாம். ஒருவராலும் வெல்லமுடியாத தாங்கள் படைவீரரில் சிலரை அந்த இராம இலக்குனராகிய மூடர்களிடம் அனுப்பி அவர்களை அவமதித்து தங்களுடைய பெருமையைத் தெரிவிக்கலாம்" என்று சொன்னான். இராவணன் வல்லவனாக இருந்தும் இதை ஒப்புக்கொண்டான். இவ்வரலாற்றை ஆராய்வாம்.

அனுமான் இராவணனுடைய பேராற்றலைக்கண்டுமிகவும்ஆச்சரியமடைந்து அவனை மனத்துள்பாராட்டுகின்றான். அனுமான் இராவணனிடம் கூறும் செய்திகள் அனைத்தும் பொய்யானவைகளாகவே காணப்படுகின்றன. அவன் முதலில் சுக்ரீவனுடைய தூதனென்றும், பின் ராமனுடைய தூதனென்றும், பின் சுக்ரீவனுடைய தூதனென்றும் கூறுகின்றான் இவனை இராவணனிடம் இராமனாவது சுக்ரீவனாவது தூதாக அனுப்பியதுண்டா? இச்செய்தி எங்கும்காணப்பெறாததே. இதனால் இது முழுப்பொய் என்பதற்கு என்ன ஐயம்?

அனுமான், "நான் இராவணனைக் காண வந்தேன். அதற்காக அசோக வனத்தை அழித்தேன், அரக்கர் என்னைத் துன்புறுத்தினர், என் உடலைக்காக்க அவர்களைக் கொன்றேன்." என்று கூறுகிறான். இது உண்மையா? இராவணனைக் காண்பதற்கு அசோகவனத்தை அழிப்பானேன்? அத்தீய செயலைத் தடுக்க வந்த அரக்கரைக் கொல்வானேன்? என்னே பொருந்தாக் காரணம்? இது உடற்கொழுப்பாளர் கூற்றேயன்றி வேறென்னாம்? அனுமான் உடற்கொழுப்போடு அறிவும் உடையனாகலால் தன் உடற்கொழுப்பு அடங்கிய போது தூதனென ஓர் போலிக் காரணம் கூறித் தப்பித்துக் கொள்ள முயல்கின்றான். இவனுக்குத் தலைவனாக வந்த அங்கதனும் கூட இராவணனிடம் தூது போம்படி ஓர் வார்த்தை கூடக் கூறவில்லையே! தன்னை இராவணன் கொன்று விடுவானென்று அஞ்சிய அனுமான் தான் தூதனெனப் போலிக் காரணம் கூறித் தப்பித்துக் கொள்ள முயல்கின்றான். அதனாலேயே இன்னாருடைய தூதனெனக் கூறமுடியாமல் பலவாறு உளறுகிறான் ஓரிடத்தில் இராமதூதனெனவும் மற்றோரிடத்தில் சுக்ரீவன் தூதனெனவும் இரண்டுமற்ற தான் பொய்யுரைக்கின்றான்.

இராவணன் அனுமானைக் "கொலைபாதகனே தூதனல்லன்" எனத்துணிந்து கொல்லுமாறு கட்டளையிடுகின்றான். அப்போது அனுமான், செத்துப் போவான், ஆதலின் எப்படியாவது அவனைத்தப்புவித்து இராமனை வரவழைத்துப் போர் மூட்டி தான் இராமனோடு சேர்ந்து தன் அண்ணனைக் கொல்லவேண்டு" மென்று துணிந்து சகோதரத் துரோகியாகிய வீடணன் "தூதரைக் கொல்லுதல் அழகில்லை" என்று கூறுகின்றான் அப்போது "கொலை பாதகனைக் கொல்லுதல் பாவமோ" என இராவணன் வினவ, வீடணன் மாறிக்கொண்டு வேறு வகையாக இராவணனை ஏமாற்றுகின்றான் வீடணன், "தூதரைக் கொல்லக்கூடாது இவனைக் கொல்லுதல் தகுமே என்றாலும் அதனால் பயன் என்னை! நாம் பாவிகளும் மூடர்களுமாகிய இராமலக்குவரையன்றோ கொல்லுதல் வேண்டும்! ஆதலின் இவனை விட்டு விட்டால் இவன் போய் அவர்களை அழைத்து வருவான் என்று கூறுகின்றான். என்னே நயவஞ்சகம்! சீதைக்கு வேண்டும் உதவிகளைச் செய்ததோடு அடிக்கடி தனது மனைவி மகள் மூலம் அவளுக்குச் செய்திகளும் சொல்லி அனுப்பி வந்த பாவியாகிய வீடணன் இவ்வாறு பேசாமல் வேறு எவ்வாறு பேசுவான் இராமலக்குவரைத் தீயவரென்றும் மூடரென்றும் இகழ்ந்துரையாடி இராவணனுக்கு வேண்டியவனைப் போல பாசாங்கு பண்ணி அவனை இவன் ஏமாற்றுகிறான். வீரனாகிய இராவணன் அதற்கு இசைகிறான்.

வீடணன் "தூதர்களை மொட்டையடித்து, அங்கத்தைக் குறைத்து அடையாளம் செய்து அனுப்பலாம்" என்று கூறுகிறான். இது அரச நீதியாகுமோ? தூதர்களுக்கு ஊறு செய்யாது பேணி அனுப்புதலே அரச நீதியாம். அங்கத்தைக்குறைத்தலில் கால்களை வெட்டுதலும் கண்களைக் குத்துதலும் அடங்கும். இத்தீய செயல்களைத் தூதரிடைப் புரிவது அரச நீதியா? தலையை வெட்டுதலும் அங்கத்தைக் குறைத்தலில் அடங்காதா ஆரியர் அரசநீதி மிக அழகிதே. இராவணன் இயல்பிலே இரக்கமுடையோனாகலின் கொலைபாதகனாகிய அனுமனையும் கொல்லுதற்குத் துணிந்ததன் எண்ணத்தை வீடணன் நயவஞ்சக உரையால் மாற்றுகிறான். அன்பர்கள் வீடணனுடைய நயவஞ்சக உரையை மறுமுறை படித்து அவன் தீயசிந்தையைத் தெரியவேண்டுகின்றோம். இனி கம்பர் புரணியை ஆராய்வாம்.

அனுமன் நான்முகக்கணையால் கட்டுப்பட்டவுடன்சிலதூதர் இராவணனிடம் ஓடி அச்செய்தியைக் கூறினரெனவும், உடனே இராவணன் நீங்கள் ஓடிச்சென்று அக்குரங்கைக்கொல்லாமல் பிடித்து வரும்படி நமது கட்டளை என்பதைக் கூறுங்க" ளென அவர்களை விரைந்தனுப்பினன் எனக் கம்பர் கூறுகிறார். இது இராவணனுடைய உயர் குணத்தைக் குறிப்பதெனினும் அன்றி அவனது அரச தந்திரத்தையே குறிப்பதெனினும் இது வால்மீகி கூறாததே. அனுமன் கட்டுண்டது கேட்டுச்சீதை வருந்தினளென்று கம்பர் கூறுவதும் வால்மீகி கூறாததே.

அனுமன் இராவணனைக் கண்டபோது அவனுடைய பெருமையைப் பாராட்டிச் சிந்தித்ததாக வால்மீகி கூறும் செய்திகளையெல்லாம் கம்பர் மறைத்தார். அனுமான் இராவணனுடன் போர் செய்து கொல்லச் சிந்திக்கின்றானென்றும் அதில் கடைசியாக அவன் தன்னை இராவணனால் கொல்லமுடியாதெனும் தன்னாலும் அவனை வெல்ல முடியாதெனவும், அவனோடு சண்டை தொடங்கினால் அது முடிய நெடுங்காலமாக அதனுள் சீதை மடிவாளாகையால் எவ்வாற்றானும் போரிடல் கூடாதெனத்துணிகின்றானெனவும் கம்பர் கூறுவனவெல்லாம் அவருடைய புதுக் கதையே. கடைசியாக இராவணனிடம் தூதனாகத் தன்னைப் பாவித்தொழுகுவதே ஏற்றதென அனுமன் துணிந்தானெனக் கம்பர் கூறுவது உண்மைக்குப் பொருத்தமானதே. இராவணன் தனது அமைச்சன் மூலமாகவே அனுமனை வினவினனென வால்

[தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க]

ஈரோடு ஆலயப்பிரவேச வழக்கு.

(அய்யாமுத்து)

உலகத்தில் மெய்மைக்கும் பொய்மைக்கும் சதா போர் நடந்துகொண்டிருக்கிறது. சில சமயம் பொய் மெய் போலவும் காணப்படுகிறது.

* *

ஈரோடு ஆலயப்பிரவேச வழக்கு கடந்த பத்து மாதங்களாய் நடைபெற்று வந்தது. அது நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் சகஜானந்தங்கள் வெளிக்கிளம்பவில்லை வரதராஜுலுகள் விளம்பரங்கள்தரவில்லை. தலைவர்களின் அறிக்கைகள்புறப்படவில்லை.கடற்கரைக்கூட்டங்கள் கூட்டப்படவில்லை. எல்லாம் மௌனமாகவேயிருந்தன.

* *

ஈரோட்டில் துணிச்சலாக சில வாலிபர்கள் காரியம் நடத்தினர். முன்னணியில் நின்ற ஈஸ்வரருக்கு ஈ. வெ. ராமசாமி ஆதரவோ, ஊக்கமோ, உற்சாகமோ அளிக்கவில்லை என்பது உண்மையாக விருக்கலாம். ஆனால் திரு. ஈஸ்வரர், இக்கோவில் வழக்கிற்கு முன்னரும், வழக்கு நடந்த பத்து மாத காலத்திலும், அதன் பின்னரும் தற்போது திரு. ஈ. வெ. ராமசாமியின் செல்வப்பிள்ளையாக அவரது சமையலறையில் அறுசுவையுண்டி அருந்திவிட்டு அவரது உப்பரிகையில் நல்ல காற்று வாங்கிக்கொண்டிருந்தார், இருக்கிறார் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

* *

வாய்தா காலங்களில் சாட்சிகொடுக்கவும், வேடிக்கைபார்க்கவும் வெளியூர்களிலிருந்து வந்த கனவான்கள் ஈ. வெ. ரா. வின் விருந்தினராகவே வந்து சென்றனர். வழக்கைத் திறம்பட நடத்திய இரண்டு வக்கீல்களும் திரு. ஈ. வெ. ரா. மாளிகையில் தங்கிச் செல்வது வழக்கம். அவர்களது வழிச் செலவுக்குப் பல சமயங்களில் திரு. ஈ. வெ. ரா. தந்துள்ளார். மற்றும் அவரது மாப்பிள்ளையைத் தரச் செய்து மிருக்கிறார்.

* *

வழக்கை வேறு கோர்ட்டுக்கு மாற்றசென்னையில் திரு. ஜியார்ஜ் ஜோசப் அவர்களை அமர்த்தியபோது திரு. ஈ. வெ. ரா.அதன் சம்மந்தமாக ஈஸ்வரரை செலவு கொடுத்து சென்னைக்கனுப்பினர். விண்ணப்பச் செலவுக்கும் பணம் அனுப்பினர். திரு. ராமநாதனையும் உதவிக்கனுப்பினர். இன்னும் தம்மாலியன்ற எவ்வளவோ செய்துள்ளார் என்பதை ஈஸ்வரன் அறிவார்.

* *

ஆனால் ஈ. வெ. ரா. இவ்வழக்கில் போதிய ஊக்கம் காட்டவில்லை என்பது மெய்யாகவிருக்கலாம், அதற்குரிய காரணங்களை யான் ஊகிக்குமளவுக்குத் சொல்லுகிறேன். முதலாவதாக தேவஸ்தானக்கமிட்டியில் தீர்மானம் பிரேரேபிக்கு முன்னரே "யாதொன்றும் செய்துவிடவேண்டாம். எல்லாம் ஆறப்பொறுத்து, அமர்ந்தாலோசித்து திறம்படச்செய்வோம்" என்று எச்சரிக்கை செய்திருந்தார். ஆனால் இளைஞர் பலர் தங்கள் ரத்தக்கொதிப்பை அடக்க முடியாமல் "இவர் யார்?" என்றோ மற்றும் யாது எண்ணியோ திரு. ஈ. வெ. ரா. ஈரோட்டிலில்லாத சமயம் பார்த்து ஊக்கமும், உறுதியும், துன்பஞ் சகிக்க ஆற்றலும், சௌகரியமுமற்ற இரண்டு ஆதிதிராவிடர்களைத் தயார் செய்து கோவில் நுழைவு செய்தனர்.

* *

இரண்டாவதாக திரு. ஈ. வெ. ரா. அவர்களுக்கு இவ்வழக்கை எதிர்வாதம் செய்து பார்க்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்படவில்லை. யாதொரு விசாரணையும் நடத்தாமல் சர்க்கார் விதிக்கும் தண்டனையை ஏற்று சிறைசெல்லவேண்டும் என்பதும் சிலரை சிறைக்கனுப்பவேண்டும் என்றும், இவ்வாறு செய்தால் பொதுமக்கள் உணர்ச்சி பலப்படுமென்றும், அப்போது வைக்கத்தைப்போல் கிளர்ச்சி பலப்பட்டு ஏதாவது ஒரு முடிவு கிடைக்கும் என்றும் கருதினர்.

* *

ஆனால் திரு. பசுபதியும் திரு. கருப்பனும் சிறைவாச மென்றவுடன் உயிர்விடுவார்கள் போலக்காணப்பட்டது. மற்றும் பசுபதிக்கு சிறைசென்றால் வேலை போய்விடும் என்ற கவலையும் உண்டு. சிறைவாசத்திற்கேற்ற மனோதிடம் அவர்களிடம் அன்றுமில்லை, இன்றுமில்லை. இக்காரணத்தாலும், மற்றும் பல காரணங்களாலும் இளைஞர்கள் வழக்கை நடத்திச்செல்லத் தீர்மானித்து, நடத்தி. முடிவும் பெற்றனர்.

* *

திரு. ஈ. வெ. ரா. வுக்கு மூச்சுப் பிடிக்க சாவகாசம் கொடுக்கவில்லை. அவர் இனி என்ன செய்ய விருக்கிறார் என்பதை அறியத்தாமதித்துப் பார்க்கவில்லை. உடனே பேர் வழி இதுதான் சமயமெனச் சிதம்பரத்துக்குக் கிளம்பினர். சாமியென்று பட்டம் பலமாகச் சூடிக்கொண்டிருக்கும் திரு. சகஜானந்தத்தைப் பிடித்தார். அபராதம் போட்ட தொகையை கோர்ட்டுக்கனுப்பி, ஈஸ்வரருக்கும் விரோதமாக அவரைச் சிறையினின்றும் பலமாய் வெளியே தள்ளிக்கொண்டு வந்துவிட்டார்.

* *

"நாயக்கர்" போதிய சகாயம் செய்யவில்லை என்று ஒரு சிலர் திருச்சியில் கண்டனத் தீர்மானம் செய்தனர். விபீஷணர் சரணாகதி யடைந்தது போல் 'சுவாமி' சகஜானந்தமும் "நீர்தான் கதி" யென்று திரு வரதராஜுலு அவர்களையும் அவரது தமிழ்நாடு பத்திரிகையையும் அடைக்கலம் புகுந்திருக்கிறார். "தமிழ் நாடு" பத்திரிகையும் கோபுரம் தாங்கும் பொம்மைபோல் எண்ணிக்கொண்டு வெளிக்கிளம்பி விட்டது. 'நாயக்கர்' சாதிக்காது விட்டுவிட்ட பெரிய காரியத்தைத்தான் சாதித்துவிடக் கங்கணம் கட்டிக்கொண்டுவிட்டதாக பெரிய ஆர்பாட்டம் செய்கிறது. இவர்கள் கூற்றுக்களை நிதானமாக அலசிப்பார்ப்போம்.

* *

முதலாவதாக திரு. சகஜானந்தம் அவர்கள் கோவில் நுழைவுப் போராட்டங்களில் நம்பிக்கையும், சிரத்தையும், விருப்பமும் அற்றவர். "சாதி இந்துக்கள் என்னையும் எனது சாதியாரையும் வலியவந்து கோவிலுக்குள் வரும்படி அழைக்கும் வரையிலும் நான் கோயில் நுழைவில் விருப்பற்றவன். அதற்கான போராட்டங்களை நான் ஆதரிக்கமாட்டேன். போராட்டங்கள் வேண்டாமெனவே யான் தனியாக ஒரு கோவிலும் அமைத்து வருகிறேன்" என்று பொருள்பட சிந்நாட்களுக்கு முன் பத்திரிகையில் தனது கருத்தைத் தெரிவித்துக்கொண்டவர். இப்பேர்ப்பட்ட எல்லையிலாப் பொறுமையும் சகிப்புத்தன்மையும், சமாதானப்பிரியமும் கொண்ட இந்த சாது சாமி சகஜானந்தம் அவர்கட்கு ஈரோடு கோவில் நுழைவு வழக்கில் சிரத்தை உதிப்பானேன்?

* *

"வழக்கு நடைபெற்ற பத்து மாத காலத்தில் என் கருடா என்று ஒரு வார்த்தையும் கேளாமல் அசட்டுத்தனமாய் இருந்து விட்டோமே. தாழ்த்தப்பட்டவர்களை உயர்த்துவதற்காக முதலில் நாமே சாதாரண சகஜானந்தமாயிருந்து சாமி சகஜானந்தம் ஆனோமே! பின்னர் பாடசாலைத் தலைமையும் கோவில் பூசாரித்தனமும் பெற்றோமே! பற்பல மகாநாடுகளில் தலைமை வகித்தும் பேசியும் சர்க்கார் நியமனம் பெற்று சட்டசபை மெம்பரும் ஆனோமே! பின்னர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சென்று பொருள் சேகரித்து வந்தோமே! இதற்கெல்லாம் ஒருவித பரிகாரமாவது தேடவேண்டாமா? என்ற பலமான எண்ணமும் பிறர் தூண்டுதலுமே காரணமாக இருக்கலாம்.

* *

"சுவாமி சகஜானந்தம் அவர்கட்கு நமது கருத்தை தெரிவிக்க இச்சந்தர்ப்பத்தை சிறிது உபயோகப்படுத்திக்கொண்டு மேற்றொடர்வோம்.ஐயா தங்கள் எண்ணங்களும் செய்கைகளும் மாசற்றவையாக இருக்கலாம். தாங்கள் எண்ணியவாறு தங்களையும், தங்கள் 'ஜனத்தவர்களையும்' சாதி இந்துக்கள் எனச் சொல்லப்படுவோர் வலிய கோவிலுக்குள் அழைத்துச் செல்லும் காலமும் ஒன்று தானாக வரும் என்று தாங்கள் எண்ணியிருப்பது வீண் கனவேயாகும். சாதிப்பாகுபாடும், வித்தியாசமும் உள்ளவரையில் நியாயமான முறையில் கோயில் நுழைவு சிந்திப்பது இத்தென்னிந்தியாவில் முடியாத காரியம். தாங்கள் வெகுவாகப் பேசும் ஆஸ்திகப்பிரசங்கங்களும், பலமாகப் பிடித்துள்ள சாஸ்திரக் குப்பைகளும், ஆவலுடன் அணிந்துள்ள "சாமி"ப் பட்டமும் இருக்கும் வரையில் சாதி வித்தியாசங்கள் ஒழியப் போவதுமில்லை. சாதி இந்துக்கள் உளம் திரும்பித் தங்களை கோவிலுக்குள் அழைக்கப் போவதுமில்லை. இது திண்ணம்; இது உறுதி; இது நிச்சயம்;

* *

இனி நிற்க தமிழ்நாடுவின் வீரத் தலையங்கத்தையும், விளம்பரச் செய்திகளையும் அலசுவோம். 23-1-30-ல் எழுதப்பட்ட தலையங்கத்தில்,

* *

'கடவுளை மனிதன் கும்பிடுவது குற்றமானல், அதை குற்றமென்று சொல்லும் சட்டத்தை எவ்வளவு சீக்கிரமாக ஒழிக்க வேண்டுமென்பதை இந்துக்கள் சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.'

* *

என்றுஇந்தியன்பினல்கோட் சட்டத்தை கண்டிக்கப் புறப்பட்டு விட்டது இம்மாதிரி ஒரு சட்டம் சட்டப்புத்தகத்தில் இருக்கிறதென்றும், அது பற்றியே இந்துக்கள் அனைவரும் கோவிலுக்குள் செல்வதில்லை யென்றும் 'தமிழ்நாடுவிற்கு' 23—1—30ந் தேதி காலையில் ஈரோடு நுழைவுத் தீர்ப்பின் மூலம் தான் தெரிய வந்ததோ?

* *

'தேள் ஒரு புரம் கொட்ட விஷம் ஒரு புரம் ஏறினது என்பது போல இந்தியன் பினல் சட்டம் ஏற்பட்டதற்குக்காரணமான இந்து மதமும் சாஸ்திரமும், சாதியும், சம்பிரதாயமும், பழக்கமும் வழக்கமும், குருக்களும், சாஸ்திரிகளும், பண்டிதர்களும் கனபாடிகளும், கோயில்களும் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமாய்ச் செழித்தோங்கி வளர்ந்து கொண்டிருக்கையில், அவற்றையெல்லாம் காய்ந்து பொசுக்க முற்படாமலும், அவ்விதம் காய்வோரை சதா காய்ந்து கொண்டும் இருந்து விட்டு திடீர் என்று இருந்தாப்போல் இருந்து பினல் சட்டத்தை காய்வது தகுதியா? முறையா? சரியா?

* *

வழக்கு விவரத்தை விரிக்கும் வகையில் மேற்படி தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:—

* *

"இவர்கள் கோபுர வாயிலுக்குள் சென்றதும் இரண்டாம் கோபுர வாயிலை மூடிக்கொண்டு குருக்கள்மார் ஓடி விட்டனர் என்பதாகும். குருக்

[தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க]

கோவையில்

ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்

காங்கிரஸ் தீர்மானத்தின்பேரால் ஏற்பட்ட சட்டசபை ஸ்தாபனங்களின் மறு தேர்தல்கள் விஷயமாய் யோசனை செய்வதற்கு திருவாளர்கள் ஜஸ்டிஸ கட்சி தலைவர் பி. முனிசாமி நாயுடுகாரு சி. எஸ. இரத்தினசபாபதி முதலியார் ஆர். கே. ஷன்முகம் ஏ. ராமசாமிமுதலியார் பி. டி. ராஜன் பழனிசாமி நாயுடு ஈ. வெ. ராமசாமி ஆகியவர்கள் 9-2-30 தேதி பகல் 2 மணிக்கு திரு. ஆர், கே. ஷண்முகம் எம். எல். ஏ. அவர்கள் வீட்டில் கூடி யோசித்தார்கள்.

திருவாளர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியாரவர்கள் திரு. சி. எஸ. ரத்தினசாபாபதி முதலியார் அவர்களால் சொல்லப்பட்டது போல் "ஜஸடிஸ இண்டிபெண்டென்ஸ" என்கின்ற கட்சியின் பெயரால் நிற்க சம்மதித்து அந்தப்படியேநியமனச்சீட்டு கொடுக்க ஒப்புக்கொள்வதாய் தெரிவித்து விட்டபடியால் திரு வெரிவாடு செட்டியார் திரு. ஈ. வெ. ராமசாமி திரு.சி. எஸ. இரத்தினசபாபதி முதலியார் ஆகியவர்கள் வேறு யாரையும் திரு செட்டியாருக்குபோட்டியாக நிறுத்தச் சம்மதிக்காததால் திரு. டி. ஏ. ராமலிங்கம் செட்டியார் அவர்களே காலிஸ்தானத்திற்கு தெரிந்தெடுக்கப்பட வேண்டுமென்றுமுடிவு செய்யப்பட்டது.

மற்றொரு விஷயம்.

ஜஸ்டிஸ் கட்சியில் பார்ப்பனர்களை சேர்க்கா விட்டால் சில கனவான்கள் விலகிப்போய்விடுவதாய் தெரியப்படுத்தியிருப்பதை உத்தேசித்து அது விஷயமாகவும் பேசப்பட்டது.

முடிவாக திரு ஈ. வெ. ராமசாமி பார்ப்பனர்களை சங்கத்தில் அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்வதென்பது முடியாதகாரியமென்று தெரிவித்துவிட்டதால் சேர்த்துக்கொள்ள முடியாதென்றே முடிவு செய்யப்பட்டது. பிறகு திரு. சி. எஸ். ரத்தினசபாபதி முதலியாரின் ராஜி அபிப்பிராயப்படி கவுன்சிலில் பார்ப்பனர்களுடன் ஒத்துழைப்பது என்கின்ற கொள்கையின்பேரில் கவுன்சில் கட்சியில் மாததிரம் சேர்த்துக்கொள்ளுவது என்கின்ற முடிவுக்கு வரப்பட்டது. இந்த முடிவின்பேரில் சமீபத்தில் தென் இந்திய நல உரிமைச் சங்க தனி மகாநாடு ஒன்று கூட்டுவதென்றும் முடிவு செய்யப்பட்டதுடன் இதிலிருந்து இனியாரும் பிரளக்கூடாதென்றும் முடிவு செய்யப்பட்டது.

உபசாரப்பத்திரங்கள்.

பிறகு மாலை 6 மணிக்கு விக்டோரியா டவுன் ஆலில் கோவை முனிசிபாலிட்டியின் சார்பாக திருவாளர்கள் பி. முனிசிசாமி நாயுடுகாருக்கும் ஏ. ராமசாமி முதலியாருக்கும் திரு. சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் அவர்களால் வரவேற்புப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டின பிறகு எல்லா தலைவர்களுக்குமாக சிங்காநல்லூர் இருகூர் ஆதிதிராவிடர்கள் சார்பாக ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. மேல்படி நடவடிக்கைகள் முடிந்ததும் திருவாளர்கள் பி. டி. ராஜன் அவர்களும் ஈ. வெ. ராமசாமியும் ஈரோட்டிற்கும் திரு. ஏ. ராமசாமி முதலியார் சென்னைக்கும் புரப்பட்டு விட்டார்கள்.

தலைவர்களால் பேசி முடிவு செய்யப்பட்டது போலவே மறு நாள் திருவாளர் டி. ஏ. ராமலிங்கஞ்செட்டியாரவர்கள் மாத்திரமே கோயமுத்தூர் கலெக்டரிடம் நியமனச்சீட்டு தாக்கல் செய்ததால் சென்னை சட்டசபைக்கு திரு. ராமலிங்கம் செட்டியார்போட்டியின்றி தெரிந்தெடுக்கப் பட்டார்.

மதிப்புரை.

"தமிழரசு"

தமிழரசு எனமகுடமிட்ட வார வெளியீடு ஒன்று வறப்பெற்றோம் இதன் ஆசிரியர், சிறந்த தமிழ் அறிவும் ஆராய்ச்சியும் கொண்டவரும் பொதுநலசேவையில் குன்றாத ஊக்கமுடையவரும் பழந்தமிழ் பெருமையையுணர்ந்து அதை எவ்வகையினும் உயிர்ப்பிக்க வெண்ணியவரும் சீர்திருத்த அவாக் கொண்டவரும், நமது நண்பருமான உயர் திரு, மணி திருநாவுக்கரசு முதலியார் அவர்களாகும் சீர்திருத்த அவாவும் போதிய தமிழ்ப்புலமையும கொண்ட ஓர் பெரியாரை ஆசிரியராகக் கொண்ட தமிழரசை நாம் முழு மனதுடன் வரவேற்கிறோம் மாதர்பகுதி, வியாபாரப்பகுதி, விவசாயப்பகுதி, முதலிய பல பிரிவுகளோடு 16 பக்கங்கொண்டதாய் அழகிய கண்ணைக் கவரத்தக்க முகவுரைப் படத்துடனிருப்பதுடன் பேரறிஞர்களால எழுதப்பட்ட பல வியாசங்கள் திகழ்கின்றன அந்த காரத்திலும் மூடப்பழக்க வழக்கங்களிலும் ஆழ்ந்து கிடக்கும் தமிழர்களை தட்டி யெழுப்பி தமிழரசு புத்துயிரளிக்கு மென்றும், சீர்திருத்த துறையில் பெரிதும் கவனம் செலுத்துமென்றும், நம்புகிறோம். இத்தகைய ஒரு அரிய பத்திரிகையை ஆதரிக்க வேண்டுவது தமிழர்களது கடமையாகும் தமிழரசு நீடுழி வாழ்க. இதன் வருட சந்தா ரூ. 3—0—0 கிடைக்குமிடம்.

தமிழரசு காரிய நிலயம்
31-வைத்தியநாதமுதலி தெரு
சென்னை.

குறிப்பு.

அடுத்தவாரம் மலாய் நாட்டு புகைப்படங்களின் பிளாக்குகள் வெளிவரும்.

"தமிழ் நாடு."

"தமிழ் நாடு" பத்திரிகையில் ஆலயப்பிரவேசம் என்று தலைப்பில் வரும் விஷயங்களும் திரு. தண்டபாணி பிள்ளையின் பேரால்வரும் சுயமரியாதைச்சரித்திரம் என்னும் விஷயங்களுக்கும் திரு. கிருத்திவாசய்யர் நாம் குடி அரசில் ஆலயப் பிரவேசம் என்னும் தலைப்பின் கீழ் எழுதினவைகளில் தான் ரயில் சார்ஜ் வாங்கினதை மாத்திரம் மறுத்திருக்கும் விஷயத்திற்கும் பொதுவாக இப்படி ஒரு கூட்டம் ஏன் இந்தமாதிரி வேலையில் தலைப்பட்டதுஎன்பதற்கும் திரு.வரதராஜுலு மறுபடியும் தலையெடுப்பதற்கு எந்தவிதமான தந்திரத்தின் மூலம் இக்கூட்டத்தை உபயோகப்படுத்திக் கொண்டிருக்கின்றார். மற்றும் பலரும் எப்படி ஒன்றானார்கள் என்பதையும் தக்க காரணங்களுடன் ரிக்கார்டுகளுடன்பின்னால்தெரிவிக்கிறோம். ஏனென்றில் தொடர்ச்சிகளும்மற்றும்திரை மறைவில் இருக்கும் இரண்டொருவர்களுடைய மறுப்புக்களோ எதிர்ப்புக்களோ கண்டனங்களொ கொண்ட கட்டுரைகளும் முடிவு பெற்று வெளியாகிவிட்டால் பிறகு ஒரே தடவையில் எழுதிவிடலாமென்பதே நமது கருத்தாகும். ஆனால் ஒரு விஷயம் இப்போதே எழுத வேண்டியது அவசரமென தோன்றுகின்றது. அதாவது திரு. கிரித்திவாசய்யர் ரயில் சார்ஜுக்கு பணம் நம்மிடம் வாங்கவில்லையென்று எழுதியிருப்பதில் அவர் அந்தப்படி எழுதுவதற்கு நாம் ஆச்சரியப்படவில்லையானாலும் பொது ஜனங்கள் உண்மையை அறியவேண்டி மறுபடியும் ஒரு தடவை நாம் "கிருத்திவாச அய்யருக்கு ரயில் சார்ஜ் கொடுத்தது உண்டு" என்று எழுதுகின்றோம் அதுவும் நாம் சென்னையில் குடிஅரசு ஆபீசின்முன் கொட்டியிருந்த மணல் மேட்டில் இருக்கும்போது இந்த கேசு விசாரணைக்கு மிகச் சமீபத்த முந்திய நாள் கேசு வாய்தாவைச்சொல்லி ஈரோட்டுக்கு போகவேண்டுமென்று கேட்டு நாம் 5 ரூ. நோட்டாக ஒன்று எடுத்துக்கொடுத்தோம். என்று உறுதியாகச்சொல்லுகின்றோம். இந்த தடவையும் அவர் மறுப்பாரானால் அதுசமயம் திரு. கிருத்திவாசய்யருடன் கூடவந்த மற்றொரு அய்யருடையவும் அவர் கேட்டு வாங்கிக்கொண்டுபோகும் போது நம்முடன் கூட இருந்த அய்யர் அல்லாதவர்களுடையவும் பெயர்களையும் வெளிப்படுத்துகின்றோம். அப்பொழுதும் இல்லை என்று சொல்லுவாரானால் பிரகு பொது ஜனங்கள் எதைவேண்டுமானாலும் நம்ப உரிமையுடையவர்களாவார்கள்.

தவிர இது சம்பந்தமாக சில நிருபங்களும் சில கண்டனக் கூட்ட நடவடிக்கைகளும் பிரசுரிக்க சற்று தாமதமேற்படுவதற்காக நேயர்கள் பொறுத்துக்கொள்ளவேண்டுகின்றோம். சிறப்பாக திருச்சி மதுரை நிருபர்களுக்கு இது விஷயத்தில்கன் தி செலுத்துகின்றோமாயினும் அவர்களிரிக்கமுடியாததற்குவருந்துகின்றோம்.

ன் ஆத்திரத்தின் உணர்ச்சியில்காட்டி இருக்கும்மிதமிஞ்சிய வேகத்தை ஆத

தஞ்சாவூர்.

தஞ்சாவூர், கருந்தட்டாங்குடி ராசவீதி 1871 நெ. இல்லத்தில் வசித்த ரிட்டயர்ட் ரயில்வே காஷியார் திரு. அ. சண்முகம் பிள்ளை தமது 75-வது வயதில் 8—2—30-ல் காலஞ் சென்றார். அவரது ஆத்மா சாந்தியடையுமாக. அவர் 6-குமாரர்களையும் 2-குமாரத்திகளையும் பல பேரப்பிள்ளைகளையும் விட்டு விட்டு உயிர்நீத்தார். அவரது மூத்த மகன் பட்டுக்கோட்டை சத்திரம் தாசில்தார் எஸ். நடராஜ பிள்ளை ஆவார். அவரது இன்னொரு மகன் அய்யம்பேட்டை ஆசிரியர் திரு. டி. எஸ். அருணாசலம் பிள்ளை ஆவர்.

மது விலக்கு நாடகம்.

7-2-30ல் திண்டுக்கல் எரிஓடு பாடசாலையில் திருவாளர்கள் W.P.A. சௌந்திரபாண்டியன் M.L.C. அவர்களால் திறந்துவைத்து கனம் S. தியாகராஜு அவர்கள் தலைமையின் கீழ் 8-வயது முதல்16-வயதுக்கு மேற்படாத மாணவர்களைக்கொண்டு "சுந்திரநாதன்" என்றும் மது விலக்கு நாடகம்நடத்திக்காட்டப்பட்டது மதுவிலக்கு பிரசாரகர் திரு. K.S. அருணகிரிநாதர் அவர்களால் நல்ல மது விலக்குப் பாட்டுகள் பாடப்பட்டது.

விளம்பரம்.

1930 வருஷம் பிப்ரவரி மாதம் 28-ந் தேதி வெள்ளிக்கிழமை பகல் 2 மணிக்கு காரமடை பங்களாவில், 7-3-30 ந் தேதி முதல் 16-3-1930 ந் தேதி வரை நடக்கப்போகும் காரமடை ஸ்ரீ ரங்கநாதர் ரதோச்சவ காலங்களில் தாலுக்காப் போர்டுக்குச்சேர்ந்த ஜாகாக்களில் கடைகள் வகையரு வைக்கும் சுதந்திரத்தை கோயமுத்தூர் தாலுக்காப்போர்டு பிரசிடெண்டு அவர்களாலோ அல்லது அவர்கள்[illegible]திகாரம் பெற்றவர்களாலோ ஏல[illegible]நிபந்தனைகளின்படி ஏலம் விடப்படும்.

2. ஏல நிபந்தனை ஜாப்தா கோயமுத்தூர் தாலூக்காப்போர்டு ஆபீசில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பம்,

கோயமுத்தூர் தாலூக்காப் போர்டு ஆபீஸ் 11-2-1930	வே. சி. பழனிசாமி பிரசிடெண்டு, தாலூக்கா போர்டு.

குறிப்பு.

"ரிவோல்ட்" பத்திரிகை சிறிது காலம் தாமதப்பட்டு வெளிவரக்கூடுமென தெறிவித்துக் கொள்ளுகிறோம்.

ப—ர்

"அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதா பேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன் றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே"

குடி அரசு

ஈரோடு 1930 பிப்ரவரி மீ 16-உ

மானக்கேடான காரியம்.

லாகூர் காங்கிரஸ் தீர்மானத்தை அனுசரித்து என்று திருவாளர்கள் டாக்டர் யூ. ராம ராவ் அவர்களும் ராமதாஸ் பந்துலு அவர்களும் ராஜிநாமா கொடுத்துவிட்ட ராஜாங்க சபை (ஸ்டேட் கவுன்சில்) ஸ்தானங்கள் இரண்டிற்கும் இரண்டு கனவான்கள் போட்டி இன்றி தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாய் தெரிந்தோம். இவர்களில் ஒருவர் திருவாளர் எ. ராமசாமிமுதலியாரும்மற்றவர்திருவாளர் டி. ஆர்.ராமச்சந்திரஅய்யரும் ஆவார்கள். சென்னை ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்கள் எதற்காக திரு டி. ஆர். ராமச்சந்திரய்யரை ராஜாங்க சபைக்கு அனுப்பினார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. திரு. டி. ஆர். ராமச்சந்திரய்யர் இந்து வருணாசிரம தர்ம ஸ்தாபனத்தின் தலைவர். மனுதர்ம சாஸ்திரத்தையும் அதில் சொல்லுகின்றவைகளையே சனாதன தர்மமென்றும் சொல்லுகின்ற வருணாசிரமதர்மத்தை நிலைநாட்ட முயற்சிசெய்யும்சங்கத்திற்கும் தலைவர் இதை அனுசரித்து தினமும் வருணாசிரம மகாநாடு பிராமண தர்ம மகாநாடு சனாதன தர்ம மகாநாடு ஆரியர்தர்மமகாநாடுஆகியவைகள் கூட்டி தீர்மானங்கள் செய்து பிரசாரமும் செய்பவர். அன்றியும்

உயர்திரு. ராமசாமி முதலியார் பெரிதும்பாடுபட்டு உதவிசெய்து உருப்படி செய்த சாரதா மசோதாவை அடியோடு கவிழ்க்கவும் ஒழிக்கவும் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பவர். இவ்வளவும் இல்லாமல் ஜஸ்டிஸ் கட்சி கொள்கைகளுக்கும் விரோதி. அதைஅழிக்க கங்கனம் கட்டிக்கொண்டிருப்பவர். அப்படிப் பட்டவரை சென்னை ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்கள் போட்டியின்றி தெரிந்தெடுக்கப்பட விட்டிருப்பதைப் பார்த்தால் இது ஜஸ்டிஸ் கட்சிக்கு மாத்திரமல்லாமல் சென்னை மாகாண பார்ப்பனரல்லாத சமூகத்திற்கே பெருத்த அவமான மென்றே சொல்லுவோம்.

ஏனெனில் ராஜாங்க சபைக்கு சென்னை மாகாணத்தார் சிரப்பாக தமிழ்நாட்டார்கள் திரு. டி. ஆர். ராமச்சந்திரய்யரை தங்கள் பிரதிநிதியாய் ஒரு மனதாய் தெரிந்தெடுத்தனுப்பி இருக்கின்றார்களென்பதும் இந்த நாட்டின்பொது ஜன அபிப்பிராயம் ஒரு மனதாய் அவரது கொள்கைக்கே சாதகமாய் இருக்கின்றது என்பதும் அல்லது குறைந்த அளவு பெரும்பான்மையான ஜனங்கள் வருணாசிரமத்திற்கும் சனாதனதர்மத்திற்கும் இவற்றை வலியுருத்தும் மனுதர்மத்திற்கும் அனுகூலமாயிருக்கின்றார்கள் என்றாவதும் முடிவுசெய்யவேண்டியதாக இருக்கின்றது.

திரு. பனகால் அரசர் அவர்கள் சென்ற தேர்தலில் சட்டசபைக்கு நிற்கும்போது பார்ப்பனர்களும் சிரப்பாய் சனாதன தர்ம வருணாசிரமக்காரர்களும் நடந்துகொண்டதற்கு சென்னை ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்கள் இம்மாதிரி நடந்துகொண்டால் அவர்களது சுயமரியாதைக்கு நாம் வியாக்கியானம் சொல்லாமலே வாசகர்கள் தெரிந்துகொள்வார்களென்று நினைக்கின்றோம். நிற்க, மேற்படி ஸ்தானங்களுக்கு திரு. ஏ. ராமசாமி முதலியாரும் திரு. எம். கே.ரெட்டியாரும்நிற்பதாய் முதலில் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுபிறகுஜஸ்டிஸ்கட்சித்தலைவர் பிரவேசித்து ராஜி செய்து திரு. ரெட்டியாருக்கு பதிலாக திரு. கோபதி நாராயணசாமி செட்டியாரை நிற்கும் படி ஏற்பாடு செய்திருப்பதாக செய்தி தெரியவந்தது. ஆனால் கடைசியாக அந்த ஸ்தானத்தில் திரு. டி. ஆர். ராமச்சந்திரய்யர் போட்டியின்றி தெரிந்தெடுக்கப்பட்டார் என்று பார்த்தோம். இதிலிருந்து அதாவது திரு. எம்.கே. ரெட்டி விலக்கப்பட்டதற்கும் திரு. டி. ஆர். ராமச்சந்திரய்யர் புகுத்தப்பட்டிருப்பதற்கும்இடையில் ஏதாவது சூழ்ச்சியோ தந்திரமோ புகுந்திருக்கவேண்டுமே அல்லாமல் ஒரு சிறிதுகூட நியாயம்மோ நாணயமோ இருக்க இடமில்லை என்றே கருதவேண்டியிருக்கின்றதற்கு வருந்துகின்றோம். நிற்க, தஞ்சை ஜில்லாவுக்கும் இது போலவே திரு. சர். பி. ராமசாமி அய்யர் அவர்களைச் சுலபமாய் தெரிந்தெடுக்கப்பட சில ஜஸ்டிஸ் கட்சி பிறமுகர்கள் ஒப்புக்கொண்டாய் விட்டதாகவும் தெரிந்தோம். இது முன் விஷயத்தைக்காட்டிலும் அதிகமான மானக்கேடான விஷயமாகும். பார்ப்பனரல்லாதார் நன்மையையோ ஜஸ்டிஸ் கட்சியின் (தனிப்பட்ட நபர்களின் நன்மைகள் தவிர) பொது நன்மையையோ கருதிப் பார்ப்போமானால் மேல் கண்ட இரண்டுபார்ப்பனர்களிலும் திரு. சர். சி. பி. அய்யரே பெரிய ஆபத்தும் சரியான எதிர்ப்புமானவர். எப்படியென்றால் முன்னவர் வாயில் சத்தம் போடுகின்றவர் அவரால் ஒன்றும் பிரமாதமான ஆபத்து வந்து விடாது. ஏதோ சில பணக்காரர்கள் பட்டை நாமத்தையும் விபூதிப் பூச்சையும் பூசிக்கொண்டு பார்ப்பனர்கள் பின்னால் சாமி சாமி என்று கும்பிடவும் ஏழைகளைப் பார்த்தால் சீறி விழவும் முடியும். அன்றியும் வெளி நாட்டு மக்கள் நம்மை இழிவாய் நினைப்பார்கள், மற்றபடி பின்னவரோ என்றால் அவர்காரியத்தில் கழுத்தை அருப்பவர். திரு. சர். சி. பி. அய்யர் சென்னை அரசாங்கத்தில் அதிகாரத்தில் இருக்குமட்டும் சென்னை அரசாங்கத்தில் உத்தியோகம் ஒப்புக்கொள்ள மாட்டோம் என்று கோயமுத்தூர் மகாநாட்டில் சொன்னோம் அன்றியும் அவர்களாலேயே ஜஸ்டிஸ் கட்சியார்கள் உத்தியோகம் பதவி அதிகாரம் ஆகியவைகள் இழந்து பரிதவிக்க நேர்ந்தார்களென்றும்ஜஸ்டிஸ்கட்சிக்குஅவர் செய்த கொடுமையையும் துரோகத்தையும் வண்டிவண்டியாய் எடுத்துச் சொன்னதோடு அவர் நாணயத்தைப் பற்றியும் குற்றம் கூறி ஆகாயத்திற்கும் பூமிக்குமாக பிரசாரம் செய்தோம். அப்படிப்பட்ட ஜஸ்டிஸ் கட்சியார் இப்போது அவரை (சர். சி. பி. யை) இந்திய சட்டசபைக்கு கஷ்டமின்றி சற்று ஏறக்குறைய போட்டியின்றி அனுப்பப்படுகிறோமென்றால்பொது ஜனங்கள் என்ன நினைப்பார்கள்? எனவேஇதற்கு அனுகூலமாயிருக்கும் கட்சிப் பிரமுகர்கள் சிலரின் நாணயத்தைப் பற்றி என்ன சொல்வது என்பது நமக்கே விளங்கவில்லை. அதினும் சர் சி பி அவர்கள் இந்திய சட்டசபைக்குதான் போவதற்காக சொல்லும் காரணம் என்ன வென்றால் ரவுண்டேபிள் கான்பரன்சுக்கும் புதிய சீர்திருத்தத்தில் விதிகள் செய்வதற்கும் தனக்கு சௌகரியம் இருக்குமென்று கருதியே இப்போது தான் ஆசைப்படுவதாக சொல்லி கேட்டுக் கொண்டாராம். அப்படியானால் இந்த சமயத்தில் அவர் அங்கு போக நாம் விடலாமா? என்று யோசித்தால் கடுகளவு சுயமரியாதை இருந்தாலும் அவர் அங்கு போகாமல் இருப்பதற்கு தன்னால் கூடியவரை முயற்சி செய்வதே உண்மையான பார்ப்பனரல்லாதாருக்கோ ஜஸ்டிஸ் கட்சியாருக்கோ கடனாகும். அப்படிக்கு இல்லாமல் அவரைச் சுலபமாய்ப் போக விடுவது என்பது நினைக்க நினைக்க பதரக்கூடிய காரியமாய் இருக்கின்றது.

தவிர சென்னை நகரத்தில் காலியாயிருக்கும் ஒரு சென்னை சட்டசபை ஸ்தானத்திற்கு ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் ஒருவரும் நிற்காமல் அதையும் ஒரு வருணாசிரமக் காரனாகிய திரு சாமி வெங்கிடாசலம் செட்டியாருக்கு போட்டியின்றி விட்டு விட்டதாகத் தெரிகின்றது. இதுவும் ஜஸ்டிஸ் கட்சிக்கு பெரிய அவமானமும் அதன் பலக்குறைவைக்காட்டக் கூடிய அறிகுறியும் ஆகும்என்றே சொல்லுவோம் ஜஸ்டிஸ் கட்சி உண்மை வீரர் எனத்தகும் திரு சுந்திரராவ் நாயுடு அவர்கள் அந்த ஸ்தானத்திற்கு நிற்பதாக தெரிவித்து விட்டு கடைசியாக வருணாசிரமத்திற்கு போட்டியின்றி விடுவதென்றால் இதினும் எந்தத்தலைவர்கள் புகுந்து என்ன புரட்டுப் பண்ணினார்களோ என்றுதான் எண்ண வேண்டி இருக்கிறதும் தவிர இது மிகவும் வருந்தக்கூடிய காரியமாகும்.

இவைகள் தவிர சென்னை நகரத் தொகுதியில் இந்திய சட்டசபைக்கு காலியான ஒரு ஸ்தானத்திற்கு ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் இரண்டு கனவான்கள் நிற்கின்றார்கள். ஒன்று பி.டி. குமாரசாமி செட்டியார், இரண்டு திரு.சிவப்பிரகாசமுதலியார் ஆவார்கள்.இதில் என்இந்தப் பிரமுகர்கள்போட்டிபோடுகின்றார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. ராஜாங்கசபைக்கு ஒரு பார்ப்பனர் போட்டி இன்றிப்போக பைசல் செய்த தலைவர்களுக்கு இதை போட்டியில்லாமல் செய்யத்தக்க யோக்கியதை இல்லையா என்று கேழ்க்கின்றோம். ஆகக்கூடி இந்தப போட்டிசுயநலப் போட்டியே தவிர இதில்சிறிதாவது பொதுநலப்போட்டி இருப்பதற்கு இடமிருப்பதாய்த் தெரியவில்லை. ஏனெனில்

சுயமரியாதைத் மாகாண மகாநாடு.

சுயமரியாதை மாகாண மகாநாடு முதல் முதலாக சென்ற வருஷம் செங்கல்பட்டில் கூடியதும் அதை அடுத்த வருஷத்திற்கு ஈரோட்டிற்கு அழைக்கப்பட்டதும் யாவரும் அறிந்த விஷயமாகும்.

சுயமரியாதை இயக்கம் என்பதாக ஒன்று தோன்றி 4, 5 வருஷ காலமானாலும் அது ஒரு விதமாக அதாவது சாதகமாகவோ அன்றி பாதகமாகவோ எப்படியோ ஒரு விதத்தில் பொது மக்களின் கவனத்தை இழுத்து எங்கு பார்த்தாலும் இவ்வியக்கத்தைப்பற்றி பேசிக்கொண்டிருக்குப்படியான நிலைமையைபெற்று விட்டது.

மற்றும் இவ்வியக்க வேகமானது இன்றைய தினம் அரசியல் விஷயங்களிலும் மதவிஷயங்களிலும் சமூக விஷயங்களிலும் புகுந்து அவைகளை யெல்லாம் சற்று ஆட்டி விட்டதோடு இதன் பேரால் பிழைத்து வந்தவர்களின் பிழைப்பில் மண்போடும்படியான நிலைமை ஏற்பட்டு இருப்பதை யாரும் மறுக்க முடியாது. இவைகளுக்கு ருஜுவு வேண்டுமானால் நமது எதிரிகளின் வாக்குமூலங்களிலிருந்தே தெரிந்துகொள்ளலாம். அதாவது சட்ட சபைகளில் திரு. முத்துரங்க முதலியார் போன்றவர்கள் மூலமாய் சுயமரியாதை இயக்க விஷயமாய் கேட்கும் கேள்விகளாலும் வெளியில் திருவாளர் சத்தியமூர்த்தி பி, வரதராஜுலு போன்றவர்கள் தேசியத்திற்கு ஆபத்து என்னும் பேரால் பிரசவவேதனைப்படுவதாலும் இந்து கிறிஸ்தவ மகமதிய முதலிய மதப்புரோகிதர்கள் இதைப்பற்றி ஆவலாதி கூறுவதாலும் சைவசமாஜக்காரரும் வைஷ்ணவ மண்டலக்காரர்களும் கூடிககொண்டு மூலை மூலையாய் ஒப்பாரி வைத்து அழுவதாலும் பண்டிதர்கள் சாஸ்திரிகள் தங்களுக்கு மரியாதை இல்லாமல் பரிதபிக்கின்றதாலும் பல மடாதிபதிகள் இதை எதிர்க்க பணம் கொடுத்து கூலிகளைப் பிடித்து உளரச் சொல்லுவதாலும் சில அதாவது சிருங்கேரி போன்ற பெரிய மடாதிபதிகள் நம்மையே ராஜி பேச "ஸ்ரீமுகத்தின்" மூலம் கூப்பிடுவதாலும் மற்றும் சனாதன மகாநாடுகளும் ஆஸ்திகர்கள் மகாநாடுகளும் தினமும் நடப்பதாலும் கோவில் அதிகாரிகள் தங்கள் கோவில்களுக்கு ஆபத்து என்றும்வரும்படி குறைந்து விட்டதென்றும் "கோவிலுக்குள் தாழ்ந்த வகுப்பார் பிரவேசித்து விடுவார்கள்" என்று சொல்லி நாம் போகின்ற ஊர்களில் எல்லாம் போலீஸ் உதவியுடன் கதவுகளைச் சாற்றிக் கொண்டிருப்பதாலும் ஒருவாறு இதன் வேகத்தை உணரலாம். மற்றும் ஆங்காங்கு நடைபெறும் சடங்கு புரோகிதம் பகிஷ்காரத்தாலும் கலப்பு மணம் விதவை மணம் ஆகியவைகளின் மலிவாலும் கூட உணரலாம்.

அன்றியும் இவ்வியக்கம் நமது நாடு மாத்திரமல்லாமல் வெளி நாடுகளிலும் கானலில் நெருப்பு பிடிப்பது போல் படர்ந்து கொண்டேயும் போகின்றது.

உதாரணமாக நாம் இவ்வியக்க விஷயமாய் மலாய் நாட்டுக்குப் போகும் போது தமிழ் நாடு பத்திரிகை செய்த விஷமம் யாவருக்கும் தெரிந்திருக்கும், மலாய்நாட்டிலுள்ள இவர்களது கூலிகளையும் மருந்துவிற்கும் ஏஜண்டுகளையும் ஏவிவிட்டு விஷமம் செய்ததும் தெரிந்திருக்கலாம். நாம் மலாய் நாடுபோகின்றோம் என்று தெரிந்ததும் நம்மை "தடுத்து விட்டார்கள்" "நாயக்கர் கோஷ்டி பகிஷ்காரம்" என்றும் "நாயக்கருக்குதடை உத்திரவு" என்றும் அது பலவிதமாய் எழுதிவந்ததும் யாவரும் அறிந்ததே. ஆனால் நாம் மலாய்-நாடு போய் வந்த பிறகு அதே தமிழ் நாடு பத்திரிகையும் அதன் பத்திராதிபரான திரு. வரதராஜுலுவும், அதன் கூலிகளும் பொறுமைப்படும் அளவையும் தன்னை அடியோடு ஒழிக்கமுயற்சித்த ஆட்களின் காலுக்குள் புகுந்து கூலி கொடுத்துக் கூட்டி வைத்து அழுகும் ஒப்பாரி அழுகையும் ஆத்திரப்படும் மாதிரியும் அவர் பத்திரிகையில் பார்த்தாலே குடியேற்ற நாடுகளிலும் இவ்வியக்கத்தில் மக்களுக்கு உள்ள ஆர்வம் இன்னதென விளங்கும்.

இவற்றிற்குக் காரணம் என்னவென்றால் எவ்வளவு எதிர்ப்பு ஏற்பட்ட காலத்தும் எவ்வளவு சூழ்ச்சி ஏற்பட்டகாலத்தும் அவைகளையெல்லாம் லட்சியம் செய்யாமல் எந்தக் காரணத்தைக் கொண்டும் ஆரம்பித்த கொள்கைகளிலிருந்து ஒரு சிறிதும் பின் வாங்காமல் உறுதியாய் நின்றதோடு மேலும் மேலும் முன் போகவே முயர்ச்சித்ததாலுமே தான் எவ்வித குறைவோ தடையோ இல்லாமல் இவ்வியக்கம் முன்னேறிக் கொண்டுபோகின்றது.

நிற்க எப்படி எல்லா இயக்கங்களையும் ஒரு கூட்டம் தங்கள் சுயநலத்துக்கும் வயிற்றுப் பிழைப்புக்கும் சோம்பேரி வாழ்வுக்கும் உபயோகப் படுத்தி வாழ்வது போலவே இவ்வியக்கத்தையும் சிலர் தங்கள் வாழ்வுக்கும் வயிற்றுப்பிழைப்புக்கும் உபயோகப் படுத்திக்கொண்ட முறையில் ஏதாவது சிறு சிறு தடையோ பொதுஜனங்களுக்குசிறு அதிருப்தியோ உண்டாகும்படியான காரியங்கள் சில சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருக்கக்கூடும் என்பதை நாம் ஆட்சேபிக்கவில்லை. உதாரணமாக ஈரோட்டில் நடந்த இரண்டொரு காரியங்களைச் சொல்லலாம் ஆனாலும் அவைகளைக் கண்டு நாம் பயப்படாமலும் சளைக்காமலும் அதற்குத்தகுந்த பரிகாரங்களைச் செய்து விட்டு மேல் போக வேண்டியது அறிவுடைமையே ஒழிய அதற்காக இயக்கத்தை குற்றம் சொல்லிவிடக்கூடாது. இப்போதும் கூட வயிற்றுப் பிழைப்புக்காக சுயமரியாதை இயக்கத்தின் பேரை வைத்துக்கொண்டு திரிபவர்களிற் சிலர் திருடுவதையும் நம்பிக்கை துரோகம் செய்வதையும் பொய் சொல்லிமக்களை ஏமாற்றுவதையும் சிறுபிள்ளைகளை வஞ்சிப்பதையும் சமையத்திற்குத் தகுந்தபடி வேஷம்போட்டு பேசி மக்களை ஏமாற்றி பொருள் பறிப்பதையும் துற்செய்கைகளையும் செய்து விட்டு சுயமரியாதை என்று சொல்லிக் கொண்டு திரிந்து வயிறு வளர்ப்பதையும் நாம் பிரத்தியட்சத்தில் பார்க்கின்றோம். இதற்காகவும் நாம் இயக்கத்தை குற்றம் சொல்லவோ நிறுத்தி விடவோ முயற்சிப்பதும் மடமையேயாகும். வேண்டுமானால் எதிர்காலத்தில் இவ்விதமான காரியங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியதை முன்னிட்டு சற்று ஜாக்கிரதையாயும் கண்டிப்பாகவும் இருக்க வேண்டும் என்பதை நாம் மனப்பூர்த்தியாய் ஒப்புக் கொள்ளுகின்றோம். இவ்வியக்கம் ஏற்பட்டு இன்றைக்கு 4,5 வருஷகாலம் ஆகியிருந்தாலும் இதன் பேரால் நம்மால் வெளிப்படுத்தப்படும் பத்திரிகைகளுக்கும் கொள்கைகளுக்கும் நாமே பொருப்பாளியாயிருந்துவந்ததோடு பொதுஜனங்களிடமிருந்தோ அல்லது வேறு நண்பர்கள் இடம் இருந்தோ இன்றைய வரையில் ஒரு சின்னக்காசாவது இவைகளுக்காக நாம் வாங்கவில்லை என்பதையும் இந்த சமையத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். இவ்விஷயத்தில் நாம் வேண்டுமென்றேஜாக்கிரதையாய் இருந்து வந்திருக்கிறோம். ஏனெனில் பணம்கொடுத்த காரணத்தாலோ அல்லது வேறுவித உதவி செய்த காரணத்தாலோ நமது அபிப்பிராயத்தின் மீது அதிகாரம் செலுத்த ஏற்பட்டு விட்டால் அது நமது இயக்கத்திற்கு தொல்லை விளைவிக்கக் கூடியதாகி விடக்கூடுமென்று பயந்தே நமது அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்பவர்கள் எல்லாம் நமக்கு வேண்டியவர்கள் என்றும் ஏற்றுக் கொள்ளாதவர்களானால் அவர்களிடத்தில் நமக்குவேலையில்லை என்றும் மாத்திரம்முடிவுசெய்துகொண்டு நடந்து வந்திருக்கின்றோம். இந்த முறையில் இன்றையதினம் வேண்டாதவர்களாயிருப்பவர்கள் நாளை வேண்டியவர்களாகலாம் வேண்டியவர்களாயிருப்பவர்கள் நாளை வேண்டாதவர்களுமாகலாம்ஆதலால் அப்படிப்பட்ட சமயங்களில்நாமும் மற்றயாரும்மனவருத்தப்படாமல்இருப்பதற்கு எவ்வித உதவியும்யாரிடமிருந்தும்பெறாமலிருந்தால்தான் முடியும்

திருவாளர்கள் டி. ஆர் ராமச்சந்திர அய்யரையும் சாமி வெங்கிடாசலம் செட்டியாரையும் போட்டி அன்றியில் விட்டவர்கள் இதில் போட்டிபோடுவது பொது நலத்தை உத்தேசித்ததாய் இருக்க முடியுமா என்று கேட்கின்றோம். அந்தப்படி இதில் இந்திய சட்ட சபையில் பொது நலப் போட்டிக்கு கடுகளவாவதுஇருப்பதாகயாராவதுகாரணம்சொல்லவரக்கூடுமானால்அப்போதுசென்னை சட்ட சபையும் இராஜாங்க சட்டசபையும் மனு தர்மத்திற்கும் வருணாச்சிரம தர்மத்திற்கும் போட்டி இல்லாமல் விட்டதில் கண்டிப்பாய் சுய நலத்தைத் தவிர வேறு ஒன்றுமே இருக்கமுடியாது என்றுதான் சொல்லித் தீர வேண்டியிருக்கின்றது. இப்படிப் பட்ட கனவான்களாலேயே ஜஸ்டிஸ் கட்சியானது ஜான் உயரவும் முழம் தாளவுமாய் கஷ்டப்பட்டுக்கொண்டு வருகின்றது. இனியும் அதே நிலைமை நிலைத்திருக்கப் பாடு படுவது சென்னையில் உள்ள சிலருக்கு ஏதாவது பலன் விளைவிக்கக் கூடியதாயிருந்தாலும் சென்னை மாகாணத்தில் சென்னைக்கு வெளியில் சிறப்பாக தமிழ் நாட்டில் அது பொது ஜனங்களுக்கு பெருத்தஆபத்தையும் அவமானத்தையும் கொடுக்கக்கூடியதாகவே முடிவதாகும் என்று மிகுதியும் வருத்தத்துடன்தெரிவிக்கின்றோம்.

அன்றியும்இந்தப்படி தைரியமாயும்உறுதியாயும்இருக்கவசதிஇருந்தால்தான்நமது அபிப்பிராயத்தை நிலைநிறுத்தப் பாடுபட முடியுமே ஒழிய தாட்சண்ணியம் இருந்தால் முடியவே முடியாது.

இவ் வியக்கத்தை ஆரம்பிக்கும்போதும் கூட நாம் "என்னையே எண்ணி இப் பெரும் பழி ஏற்றேன்.;; என்று ஒரு பாட்டில் சொல்லப்படுவது போல் நம்மையே நாம் பொருப்பாளியாகவும் உதவியாளனாகவும் எண்ணியும் நம்பியுமேதான் இக் காரியத்தில் இறங்கினோமே யொழிய நமக்கு "தொண்டர்கள் உண்டு தலைவர்கள் உண்டு சினேகிதர்கள் உண்டு பண உதவி செயபவர்கள் உண்டு" என்று நினைத்து அவர்கள் உதவி கிடைக்கும் என்று நம்பிக்கை வைத்து இவ் வியக்கத்தில்நாம்இறங்க வில்லை.ஆதலால் நமதுகொள்கைகளைஉத்தேசித்து வருகின்றவர்களை வரவேற்கவேண்டியதும் போகிறவர்களை போகச் சொல்லவேண்டியதும் ஒழுக்க மற்றவர்கள் என்று கருதப் பட்டவர்கள் தள்ளப்பட வேண்டியதும்இவ் வியக்கத்தின்கடமையாகி விட்டது. இவ்விஷயத்தில் நமக்கு உள்ள உறுதிதான் இவ்வியக்கத்திற்குசொத்தும்அஸ்திவாரமுமேயொழியவேறொன்றுமில்லை இதுசமயத்தில் இதைஏன் எழுத வேண்டி வந்ததென்றால் "சில தலைவர்களும் சில தொண்டர்களும் எதிரிகளாயும் எதிரிகளின் ஆள்களாயும் இருக்கின்ற இந்த சமயத்தில் மகாநாடு நடத்துவது சற்று கஷ்டமாயிருக்காதா?'; என்று சில நண்பர்கள் கவலைப்படுவதால் இதை எழுதவேண்டி வந்ததேதவிர வேறில்லை

'செங்கல்பட்டில்சிலர் ஏற்றுக் கொண்டபடி மகாநாடு இவ் வருஷம் மார்ச்சு அல்லது ஏப்ரலில் நடத்த வேண்டியது. அவசியமானது. அதற்கு இதுவரை 3000 ரூ. போல் வாக்குத் தத்தம் செய்யப் பட்டிருக்கின்றது] இனியும் இரண்டாயிரம் ரூபாய் ஒன்று அல்லது இரண்டு வாரத்தில் கிடைத்துவிடலாம். இது ஆனதும் மகாநாட்டின் வேலை துவக்கமாகிவிடும். பிறகு மேல்கொண்டு கிடைப்பதையும் வெளிவசூல்களையும் உத்தேசித்தே மகாநாட்டை எத்தனை நாட்களுக்கு நடத்துவது என்பதுபற்றி யோசிக்கப்படும். ஏனெனில் சென்ற மகாநாடு 10-ஆயிர ரூ. வரை செலவு செய்து இரண்டு நாளில் முடித்து விட்டதானது பலருக்கு ஏமாற்றமாயும் மொசுக்கென்றும் போயிருக்கும். ஆதலால் ஈரோட்டில் ஒருவாரமாவது மகாநாடு நடத்த வேண்டும். என்று கருதுகின்றோம். ஏனெனில் ஒவ்வொரு தினமும் இயக்க சம்பந்தமான வேறு மகாநாடுகளும் தனித்தனி உபன்னியாசங்களும் கண்காட்சிகளும் நாடகங்களுமாக நடத்திக் காட்ட வேண்டுமென்று சில நண்பர்கள் ஆசைப்படுகின்றார்கள். அதுபோலவே சில வட நாட்டுப் பெரியார்களை இங்கு வரவழைக்கவும் உத்தேசித்திருக்கின்றோம். அனேகமாய் இம்மாத கடைசி வாரத்தில் இங்கு சுயமரியாதை மகாநாடு ஆபீசு மூன்று திறக்கப்படும் திரு ராமநாதன் அவர்கள் அதன் முக்கிய நிர்வாகஸ்தராய் இருப்பார் அது சம்பந்தமான கடிதப் போக்குவரத்துகள் அவ்வாபீசுக்கே வைத்துக் கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்வதோடு மகாநாட்டில் வேலை செய்ய இஷ்டமுள்ள கட்டுப்பாட்டில் நிலை உள்ளவர்களும் உண்மையிலும் ஒழுக்கத்திலும் லட்சியமுள்ளவர்களுமான தொண்டர்கள் கடித மூலமாய் இப்போதே தெரிவித்துக் கொள்ளக் கோருகிறோம். அனேகமாய் மார்ச்சு முதல் வாரத்தில் தொண்டர்களுக்கு அழைப்பு வந்து விடும் உடனே வரத் தயாராய் இருப்பவர்களே எழுதவும்.

"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவிப்பு.

"குடி அரசு" பத்திரிகை சந்தாதாரர்களால் தங்களுக்கு பத்திரிகை சரியாய் வருவதில்லை என்பதாக தினம் ஏராளமான ஆவலாதிகள் வந்துகொண்டிருக்கின்றன அவைகளில் பல பத்திரிகையின் மீதுள்ள வெறியினாலும் [சில பணத்தை உத்தேசித்ததாகவும் இருக்கலாம்] பலவாராக பொருமை இழந்து எழுதப்பட்டவைகளாகக் காணப்படுகின்றன பத்திரிகை சென்னைக்கு மாற்றப் பட்டதாலும் சென்னையில் ஏற்பட்ட பல விததொல்லையாலும் நாம் மலாய் நாட்டுக்கு போயிருந்தகாலையில் பத்திரிகை நிருவாகத்தை ஏற்றுக்கொண்டவர்களின் நடத்தையாலும் பத்திரிகைகள் 3 வாரம் சந்தாதாரர்களுக்கு அனுப்பப்படவில்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகின்றோம். ஆனால் நாம் சரியாய் அனுப்பிய காலங்களில் கூட தங்களுக்கு சரியாய் பத்திரிகை கிடைக்கவில்லை என்பதாக வரும் ஆவலாதிகளே அநேகமாய் காணப்படுவதால் நாம் அவற்றிற்கு ஒரே பதில் தான் சொல்லக்கூடிய நிலையில் இருக்கின்றதற்கு வருந்துகின்றோம். அதாவது, நாம் வாரம் 9000 காப்பிகள் அச்சடித்ததற்கு காகித செலவும், அச்சடித்தவைகளை தபாலில் அனுப்பியதற்கு ஸ்டாம்பு செலவும் ரயிலில் பார்சலாய் 47 பார்சல்கள் அனுப்பியதற்கு பார்சல் செலவும் இரசீதுகளும் நமது சந்தாதாரர்களுக்கு மெய்ப்பிக்க தயாராயிருக்கிறோம். மற்றபடி அது சந்தாதாரர்களுக்குப் போய்ச் சேராததற்கு நம்மால் காரணம் சொல்லமுடியாது—வருஷசந்தா 3 ரூ.க்கு பதிலாக4ரூபாயாகவும் வெளிநாட்டுக்காரர்கள் 4 ரூபாயுக்குப் பதிலாக 5 ரூபாயாகவும் அனுப்பினால் அப்பேர்ப்பட்ட சந்தாதாரர்களுக்கு பத்திரிகையை நாம் தபாலாபீசில் போட்டதற்காக தபாலாபீசில் ஒரு அத்தாட்சி வாங்கி ஒப்புவிக்க ஏற்பாடு செய்யப்படும். இதைத் தவிர மற்றபடி நம்மால் வேறு ஒன்றும் செய்ய முடியாது என்பவை வணக்கமாய் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். ஏனெனில் குடி அரசு ஆபீசுக்கு வாரம் ஒன்றுக்கு சராசரி 150ரூபாய்வீதம் மாதம் 600 ரூபாயுக்கு மேற்பட்டு ஸ்டாம்பு விற்கும் தபால் இலாகாவும் வாரம் 47 பார்சல வீதம் குடி அரசுக்கு பார்சல் சார்ஜ் வாங்கும் ரயில் இலாக்காவும் குடி அரசு விஷயத்தில் நடந்துகொள்ளும் மாதிரியைப்பார்த்தால் நாம் இவ்வளவு பொருப்பு தான் ஏற்றுக்கொள்ளமுடியும் என்று கண்டிப்பாய் சொல்ல வேண்டி இருக்கின்றது. ஏனெனில் நமது பத்திரிகையின் தொண்டு அப்படிப்பட்டதாய் ஏற்பட்டுவிட்டது. ஆகையால் இந்த நிபந்தனைக்குக் கட்டுப்பட்டவர்களே சந்தாதாரர்களாய்ச் சேர்ந்தால் போதுமானது.

தேவை.

ஈரோட்டில் நடைபெறும் "ரிவோல்ட்" (ஆங்கில) பத்திரிகைக்கு உப பத்திராதிபர் தேவை ஆங்கிலத்தில் நல்ல பயிற்சி உள்ளவராகவும். அறிவு இயக்க கொள்கை (Rationalistic views) உடையவராகவும் இருக்கவேண்டும். விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

பத்திராதிபர்
ரிவோல்ட்
ஈரோடு.

மலாய் நாடு

புறப்பாடு உயர் திருவாளர்கள் ஜனுபகள் முதலாளி அ. முகமது ருவுத்தர் அவர்களும் தி.வா சேகு முகம்மது ருவுத்தர் அவர்களும் பினாங்கிலிருந்து 8-2-30 உ இந்தியாவுக்கு புறப்பட்டு விட்டார்கள்.

திரு சுப்பய்யா அவர்கள் கோலாலம்பூரிலிருந்து 7-2-1930 ல் இந்தியாவுக்கு பிரயாணமாவதை முன்னிட்டு திருவாளர்கள் தியாகராஜன், அமிர்தம் வி. கிருஷ்ணசாமி முதலாகியவர்களால் மலாய் வீதி 8 நெ. வீட்டில் சுயமரியாதைப்பாட்டும் சொற்பொழிவும் செய்யப்பட்டு விருந்துடன் மாலையிட்டு வழியனுப்பப் பட்டார்.

விளம்பரம்

செங்கல்பட்டு முனிசிபாலிடி

செங்கல்பட்டு முனிசிபல்கவுன்சிலின் 1930-31 வது வருஷத்திற்கான டோல்கேட் முதலிய குத்தகைகள் 1929 வருஷம் பிப்ரவரி மாதம் 27 தேதி வியாக்கிழமை காலை 8-மணிக்கு முனிசிபல் கச்சேரியில் பஹிரங்கமாய் ஏலம் போடப்படும் கிருஸ்னுயில் காட்டுக்கட்டை கரி முதலியசர்பராக் களுக்கும் அன்றையதினம் தற்காலதுகள் பெறப்படும். ஏலம் அல்லது தற்காஸ்துகளுக்கான நிபந்தனைகளைப் பற்றிய தகவல்கள் அடியில் கையொப்பமிட்டவருக்கு விண்ணப்பமிட்டு தெரிந்துக் கொள்ளலாம்.

M. வேதாசலம்,
10-2-30 சேர்மென்

கவலை ஏன்?

பணமா, அப்படியானால், சொற்ப வரும்படியுள்ள வியாபாரிகள், தொழிலாளர்கள், விவசாயிகள் முதலான பேர்களுக்கு எந்த மாதத்தில் பண அவசர மேற்படுகிறதோ 'அதேமாதத்தில் தூரமான இடங்களிலிருந்தே ரூ. 5000. ஐயாயிரமுள்ள பிரதிமாத ஏலத்தில் டெண்டர் ஏலம் தபால் மூலமாய் கேட்கும் விதமுள்ள நிபந்தனைகளடங்கிய புஸ்தகத்துக்கு அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதினால் அனுப்பப்படும். ஏஜென்டுகளும் தேவை.

மானேஜர்,
தனலக்ஷிமி கம்பெனி,
திருநெல்வேலி.
Tinnevelly (S India)

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

கள்மார் ஓடுவதற்கும் பின்னால் அவர்கள் போலீசில் பிராது கொடுத்ததற்கும் இந்தியன் பினல் சட்டம் காரணமா? அல்லது அவர்களின் மதமும் சாஸ்திரமும் சம்பிரதாயமும் காரணங்களா? உரிமை கொண்டு நுழைந்தவர்களைத் தடுக்காமல் 'சுவாமி'யைக் கும்பிட விட்டிருந்தால் இந்தியன் பினல் சட்டத்திற்கு விரோதம்என்று இக்குருக்கள் ஓடினார்களா? அல்லது தங்கள் சாதித்திமிரும், ஆணவமும் அறியாமையும் அவர்களை அப்படிச் செய்யத் தூண்டிற்று? எதைத் தொலைக்க வேண்டும்?

*　　*

தீண்டாதார் கோவிலுக்குள் கும்பிட நுழைவது 295, 297 சட்டப்படி குற்றம் ஆகாதென்றே வைத்துக் கொள்வோம். நாளை "தமிழ்நாடு" கம்பெனியார் செய்யவிருக்கும் ஐகோர்ட்டு அப்பீல் கீழ்க்கோர்ட்டு தண்டனை ரத்து செய்யப்பட்டு, செலுத்திய அபராதத்தொகை திருப்பிக் கொடுக்கப்பட்டு விடும் என்றேவைத்துக் கொள்வோம். ஆனால் அப்படி ஏற்பட்ட பின்னர் மறுபடியும் இப் பசுபதியும், கருப்பனும் கோவிலுக்குள் நுழைந்தால் குருக்கள் கதவைப் பூட்டாமலும் ஓடாமலும் இருப்பார்களா? பின்னர் கொழுத்த செலவில் அவர்கள கும்பாபிஷேகம் செய்து சுவாமிக்கு உயிர் கொடுக்காமலும் இருப்பார்களா? என்பதே இப்போது யோசிக்கத்தக்கவை.

*　　*

இதற்கு அத்தாட்சியாக "தமிழ்நாடு" தனது தலையங்கத்தில்,

"மற்றொரு வழக்கில் ஜட்ஜுகள் நேப்பியரும் சதாசிவ அய்யரும் தீண்டாதார் கோவிலுக்குள் நுழைவது பினல் சட்டம் 295-வது பிரிவுப்படி அசுத்தப் படுத்தியதாகாது என்று சொல்லியிருக்கிறார்கள் என்று எழுதியிருக்கிறது.'; இத் தீர்பபு ஏற்பட்ட பின்னரும் "தீண்டாதார்" கோவிலுக்குள் அனுமதிக்கப்படாமலும் தாமாகவே நுழைந்தால் கதவுகள் சாத்தப்பட்டு வழக்குகள் தொடரப்பட்டு வருவதும் என்னென்று 'தமிழ் நாடு' சொல்லட்டும், இதற்குச் சட்டம் காரணமா? அல்லது அச் சட்டத்தை இயற்றிய மதம் காரணமா? மூலாதாரமான மதக்கொள்கை சமதர்மத்துக்கு விரோதமாய் இருக்கும்போது சட்டம் என்ன செய்யும்?

*　　*

சுயமரியாதைத் தலைவர் மீது பழி சுமத்தி, அவர் ஆலயப் பிரவேசத்திலும் அதன் சம்பந்தமான வழக்குகளிலும் அதில் சம்பந்தப்பட்ட வாலிபர்களிடத்தும், பற்றும், பரிதாபமும், இரக்கமும் அற்றவராய் இருக்கிறார் என்று விளம்பரப் படுத்தும் எண்ணத்தோடு 'தமிழ் நாடு' புறப்பட்டிருந்தால், அதன் கூற்றை வெளிப்படுத்த சுயமரியாதைத் தலைவருக்கு ஆற்றல் உண்டு என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மற்றும் தமிழ் நாட்டில் நியாயம், அநியாயம் முதலியவைகளைப் பகுத்தறியும் ஆற்றல் ஜனங்களிடை அற்றுப் போகவுமில்லை என்பதையும் தெரியப்படுத்துகிறேன்.

*　　*

உண்மையாகவே 'தமிழ் நாடு' தனது தலையங்கத்தில் கூறியுள்ளவாறு.

'இந்து மதத்தில் இருக்கிறவரை அந்த மதத்திலுள்ள குற்றங்களைப் போக்கி, எல்லாருக்கும் சம உரிமை கிடைக்கும்படி செய்யவேண்டியது'

என்ற எண்ணம் இருக்குமானால் நாட்டில் 'ஆண்மை வளர்ச்சிக்கும் சுதந்திர உணர்ச்சிக்கும் விடுதலைக்கும் ஆபத்து விளைவித்து வரும்படியான' ஏற்றத் தாழ்வுகள் பேதா பேதங்கள், அவமரியாதைகள், புராண ஆபாசங்கள், கோவில் விபசாரங்கள், அறியாமைகள், மூடப் பழக்க வழககங்கள். கஞ்சிக்கும் கோவணத் துணிக்கும் ஏக்கமிடும் மக்கள் நாட்டில் கோடிக் கணக்கான ரூபாயை நாசப்படுத்திவரும் தேர், திருவிழா உற்சவம், கோவில், பூசை ஆகியவற்றை ஒழித்தெறிய பகிரங்கமாக வெளிக் கிளம்பியுள்ள சுயமரியாதைக் கட்சியுடன் சேர்ந்துழைக்குமாறு கூவி அழைக்கின்றேன்.

*　　*

இறுதியாக எனதன்புள்ள சகஜானந்தம் அவர்கள், இனியாவது தமது முயற்சியை தம் மனதிற்கு முரணற்ற முறையில் செலவழிக்குமாறு, தமது மனோ நிலைக்கும், தைரியத்துக்கும் ஆற்றலுக்கும் ஒவ்வாத பிறர் பிரவர்த்தனங்களில் குறுக்கே விழாமலும், பயனற்ற அறிக்கைகள் வெளியிடாமலும் இருக்கக் கோருகிறேன். தியாகமே உருவெடுத்தாற்போல் அவதரித்துள்ள வாலிபர் பலர் வாழும் ஈரோட்டில், கேவலம் 60 வெள்ளிக் காசுகள் கொடுத்து திரு. ஈஸ்வரனை மீட்க யாவரும் இல்லாமல் போகவில்லையென்றும், அதற்கு மாறாக சமதர்மத்தையும், சமூக நியாயத்தையும் சுயமரியாதையும் நிலை நிறுத்த சிறை செல்லவும் தேவையானால் உயிர்விடவும் நூற்றுக் கணக்கான ஈஸ்வரர்கள் ஈரோட்டிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் சூழ்ந்து நிற்கிறார்கள். என்பதை திரு. சகஜானந்தம் அறியக்கோருகிறேன்.

முன்னேற்றம்.

இஃது

சுயமரியாதைக் கொள்கையை ஆயுதமாகக்கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப் பத்திரிகை.

இதன் ஆசிரியர்-வே.சி.நாராயணசாமி

இதன் சந்தா ரூ. 4—0—0 அல்லது ஷி. 2—25

விலாசம்:— மானேஜர், "முன்னேற்றம்"

[எப்] 155, சிலிசிரோட், சிங்கப்பூர்.

மலாய் நாடு.

குழந்தைக்கு நாமகரணம்

பிறுங்கில் நவீனமுறை.

குழந்தைக்கு நாமகரணம் சூட்டுவதன் சம்பந்தமாகவும், அதன் பின்னர் நடக்கும் விருந்துக்கும் விஜயம் செய்யும்படி திருவாளர் சே. அப்பாவு பண்டிதர் அவர்களால் அழைக்கப் பட்டிருந்தபடி ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தனர். டாக்டர் மேனன் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். குழந்தையை மேஜையின் மீது வைத்து டாக்டர் மேனன் அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு "சமரசன்" எனும் நாமம் சூட்டப்பட்டது.

பின்னர் விலையுயர்ந்த சாப்பாடு கொண்ட விருந்து நடை பெற்றது. சங்கீதக்கச்சேரியோடு கூட்டம் கலைந்தது.

தேம்மாப்பட்டு புதுமனைபிரவேசம்

நிகழும் தைத் திங்கள் 20, 22 தேதிகளில் திருப்புத்தூர் கோட்டைக் கரையில் திருவாளர்களான ந. சுவாமிநாத பிள்ளை அவர்களும், அ. வீரகுமாரு பிள்ளை அவர்களும், தங்கள் பெரிய புதுமனைப் பிரவேசத்தை ஒரு பார்ப்பனரல்லாத பெரியாரைக்கொண்டு நடத்தினார்கள்.

தமிழரசு.

ஒரு புதிய அரிய வாரப் பத்திரிகை.

(சித்திர வர்ணப்படங்களுடன்)

உலக முழுவதும் நடைபெறும் அரிய இனிய நிகழ்ச்சிகளை உள்ளபடி உணர்த்தும்; அறிவை வளர்க்கும். பெரிய உண்மைகளை அழகிய முறையில் தெள்ளிய செந்தமிழ் நடையில் நன்கு புகட்டும். அரசியல் துறையில் தனக்குத் தோன்றியவற்றை அவா அச்சமின்றி எடுத்து உரைக்கும்; வியாபார நுணுக்கங்களை அவ்வப்போது விவரிக்கும்; வைத்திய நுட்பதிட்டங்களை வகுத்துக்காட்டித்தெரிவிக்கும். இதனைப் படிப்போர் தமிழறிவு, சமயசாத்திர ஞானம், ஆசார சீர்திருத்த உண்மைகள், அரசியல் முறை, உலக நடை முதலியவற்றை ஒழுங்காக உணரலாம்.

மாதிரி பிரதி இனாம்.

வருட சந்தா	உள்நாடு ரூ.	3—0—0
	வெளிநாடு ரூ.	4—0—0

ஆசிரியர்:—மணி திருநாவுக்கரசு முதலியார்.

உபபத்திராதிபர்:—திரிசிரபுரம் நடராஜன்.

தமிழரசு காரிய நிலயம்,
31 வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

முதல் முதலில் வரும் ஆடர்காரர்களுக்கு ரிஸ்டு வாச்சு இனாமளிக்கப்படும்.

இனாம்! இனாம்!!

101 ரூபாய் இனாம்.

யாருக்கு

எமது தாயத்தை பொய் என்பதாக ருஜு படுத்துபவருக்கு.

1. நினைத்த காரியம் ஜெயம். 2. பரீட்சையில் தேறச்செய்யும். 3. தனலாபம் லட்சுமி கடாட்சம். 4. வியாபாரத்தில் அதிக லாபம். 5. பந்தயங்களில் வெற்றி. 6. ஸ்திரீ புருஷர்களை வசியமாக்கும். 7. துஷ்ட கனவுகள், கர்ம வியாதிகள் எல்லாம் ஓடி ஒழிந்து விடும். 8. வழக்குகளை, கேசுகளை ஜெயிக்கும். 9. துஷ்ட தேவதைகளின் பயங்கரம் ஒழியும். 10. ஏவல் சூன்யாதி ஏறாது. 11. பேய் பிசாசுகள் முதலிய சேஷ்டைகளும் தேகாதியந்தவலியும்நீங்கும்.

முதல் முதலில். எங்களுக்கு வரும் 3 தாயத்து ஆடர்காரர்களுக்கு பெயர் வழங்குவதற்காக ரிஸ்டு வாச் இனாமாக தாயத்துடனனுப்புவோம். பின்னிட்டு மேற்படி யாரின் பெயரும் ஊரும் அச்சிடுவோம். பிந்தினால் இப்பேர்ப்பட்ட சமயம் கிடைப்பதரிது. தாமதப்படுத்தினவர்கள் கவலைப்படுவீர்கள்.

தாயத்து 1-க்கு ரூ. 2—8—0 }
,, 3-க்கு ரூ, 6—0—0 } தபால் செலவு 0—6—0

F. M. S. மலாய் நாட்டினர் முன்பணம் ரூ. 2 அனுப்ப வேண்டும்.

விலாசம்:— வசீகரம் ஆசிரமம்
6. ரகுனந்தன் லேன் கல்கத்தா (Calcutta)

[5-ம் பக்கத்தொடர்ச்சி]

மீகி கூற அவன் நேரிலேயே வினவினனென கம்பர் கூறுகிறார்.

இராவணன் அனுமனை நோக்கி "நீ அந்தணரால் வேள்வியிடை அனுப்பப்பட்ட பூதமோ! அன்றி நான்முகன் விடுத்த திகிரித்தெய்வமோ! என வினவினதாகவும், அதற்கு அனுமன் "அப்புல்லிய வலியினோர் ஏவல் பூண்டிலன்'' என்று கூறியதாகவும் கம்பர் கூறுகிறார். இதனால் கம்பர் தம்மை அறியாமலே அந்தணரையும் நான்முகனையும் புல்லியவலியினோரென இகழ்ந்தவராவர். இது வியப்பே!

நெடும்போக்காக வால்மீகி கூறும் வரலாற்றைத் தம்மனம் போல் இராவணனுக்கும் அனுமனுக்கும் தடைவிடையாகக் கம்பர் விரிக்கின்றார். இதில் அவர் அனுமன் தன்னை அங்கதன் அனுப்பிய தூதனெனக் கூறியதாகப் பாடுகிறார். இராவணன் அனுமனை நோக்கி, "உங்கள் குலத் தலைவனாகிய ஒப்பற்ற வாலியைக் கொன்றவனுக்கு நீங்கள் பணி புரிவது மிக்க அழகிது! தன் அண்ணனைக் கொல்வித்து கொன்ற பாவியிடம் அன்பு பூண்ட உங்கள் தலைவன் சுக்ரீவன் யாது கூறினன்? "என வினவியதாகக் கம்பர் கூறுகிறார். இது வால்மீகி கூறாததேனும் நிகழ்ச்சிக்குரியதே. இது கம்பர் தம் உள்ளக்கிடை வெளிப்பட்ட இடமெனில் மிக நன்றே!

வீடணன் அனுமனை இராவணன் கொல்லாவண்ணம் கூறயதாக வால்மீகி கூறும் நயவஞ்சக ஏமாற்றுகளை யெல்லாம் கம்பர் மறைத்துவிட்டார். ஆனால், கம்பர் வீடணனுடைய கூற்றாக இந்த இடத்தில் கூறும் 2 வது பாடல்களில் ஏற்றப் பாடல் [பிணி வீட்டு படலம் 166] அறிஞர் வெறுத்துத் தள்ளும் இழிதகையினதாயுள்ளது. அது வருமாறு

"இளையவன் தன்னைக் கொல்லாது
இருசெவி மூக் கொடீர்ந்து
விளைவுரை என்று விட்டார் வீரராய்
மெய்ம்மை ஓர் வார்
களைதியேல் ஆவி நம்மால் இவன்
வந்து கண்ணிற் கண்ட
உளவுரையாமற் செய்தி ஆதி என்று
அமையச் சொன்னான்."

இதன் பொருள் நமது தங்கையை [சூர்ப்பனகையை] க் கொல்லாமல் இரண்டு காதுகளையும் மூக்கையும் அறுத்து நிகழ்ந்ததை உன் அண்ணனிடம் போய் கூறு எனமெய்யையுணர்ந்த அவ் வீரர்கள் விட்டு விட்டார்கள் நீ இவனைக் கொன்றுவிட்டால் நமது செய்தியைப் பகைவர்கள் உணராமல் செய்தவனாவாய் என்று கூறினன். என்பது,

இங்ஙனம் உண்மையில் வீடணன் இராவணன் முன்கூறியிருப்பானேல் அப்போதே அவனை இராவணன் கொன்றே இருப்பான். சூர்ப்பனகை பற்றிய விளைவே சீதையை இராவணன் கவர்ந்தது. மேலும் சூர்ப்பனகை தூது சென்றவளா! இங்கு அனுமனோடு ஒப்பிடுவதற்கு. இது கம்பர் பாட்டாக இருக்குமேல் இது அறிஞர் எள்ளி நகையாடற் பாற்றே! இதைக்கேட்டு இராவணன் "நல்லதுரைத்தாய் நம்பி'' என்று கூறினனாம்!! இனிமேற் செல்லுதும்.

நான்குநேரி ஆதிதிராவிட மகாநாடு.

19—1—30 உ. நான்கநேரி தாலூக்கா ஆதிதிராவிட மகாநாடு திரு. எம். தேவதாசன் பி. ஏ. பி. எல், அவர்கள் தலைமையில் நடந்தது திருவாளர்கள் ஏ. ஜான் தேவசகாயம் பி. ஏ. அவர்கள் மதுவிலக்குப் பிரசாரகரான ராமநாதன் அவர்கள் மற்றும் 500 கனவான்கள் வரை வந்திருந்தார்கள் அதில் சர்க்கரவர்த்தியார் அரசர்பிரதிநிதியார் ஜில்லா கலெக்டர் லேபர்ஆபீசர்கள் ஈ. வெ. ராமசாமிப்பெரியார் ஆகியவர்களைப் பாராட்டியும்நன்றி செலுத்தியும், பரம்பரை கிராம உத்தியோக சட்டத்தால் ஆதிதிராவிடர்களுக்கு கஷ்டம் ஏற்படுவதுடன் கிராம உத்தியோகம் கிடைப்பதும் தடைப்படுவதால் அந்த முறையை எடுத்து விடும்படியும், கள்ளுக் கடைகளை ஏலம் விடக்கூடாதென்றும், திருவாங்கூரைப்போல் தங்கள் வகுப்புக்கு மெட்ரிக்குலேஷன் வரை இலவசமாக கற்றுக் கொடுக்கும்படிக்கும், கட்டாய இலவசச் சட்டம் ஏற்படுத்தும்படிக்கும் தங்கள் வகுப்பில் ஒருவருக்கு டிப்டி ரிஜிஸ்டார் வேலை கொடுக்கும்படிக்கும் மதுவிலக்குப்பிரசாரகர்களில் 10க்கு 2 பேரையாவது ஆங்காங்கு நியமிக்கும்படிக்கும் பல தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன என்று மீனவன்குளம் மீ. மூ. சுவிஷேஷம் அறிவிக்கிறார்.

மேயோ கூற்று

மெய்யா—பொய்யா?

விலை அணா 4.

சி. ஏ. அய்யாமுத்து.
புஞ்சைப் புளியம்பட்டி,
கோயமுத்தூர் ஜில்லா.

பாலசாமி இயற்றியவை.

ஆசிரிய விருத்தங்கள்

சாதிமத பேதமதில் லாமலே நாடெங்கும்
சமத்துவம் பரவவேண்டும்
சாத்திரபு ராணமிதி காசமத வேத பல
சமயமும் தொலைய வேண்டும்
நீதியில்லாக் கருமங்கள் செய்தல் வேண்டும் நமது
தேச முன் னேற வேண்டும்
தீண்டாமை என்கின்ற வேண்டாத பேயையினி
தேசம் விட் டோட்டவேண்டும்
ஆதித்தி ராவிடர்கள் முன்னேற வேண்டுமென
அனைவரும் கருதவேண்டும்
அதற்கெனவே கூட்டங்கள் கூடி மகா நாடுகள்
அவசியம் அமைத்தல் வேண்டும்
ஓதியுணர்ந் தாராய்ந்து நீதி மார்க் கங்களை
உறுதியாய் ஒழுக வேண்டும்
உலகுயிர னைத்தையும் தன்னுயி ரெனக்கருதி
ஒன்று பட வேண்டு மாதோ''

மனிதரில் உயர்வென்று தாழ்வென்று கற்பிக்கும்
வைதீகம் தொலைய வேண்டும்
வஞ்சகம் பொய்களவு சூது பய மோசமும்
வறுமையும் நீங்க வேண்டும்
புனிதமாம் வேதாந்த சித்தாந்த மென்கின்ற
புரட்டு வெளி யாக வேண்டும்
பூர்விக வாழ்க்கையும் ஆர்யர்கள் சூழ்ச்சியும்
பூமாந்தர் உணரவேண்டும்
அனியாய மாக நம் மக்களைத் தாழ்த்திடும்
அடிமை வாழ் (வு) அகல வேண்டும்
ஆபாச மான இதிகாச முறை யானவழி
அகற்றியே வாழவேண்டும்
இனியாகி லும் மனித ரினத்துபல் வேற்மை
இல்லாமல் ஒழிய வேண்டும்
இந்தியா நாடினிசு தந்திர உணர்ச்சியோ
டேற்றமுற வேண்டுமாதோ

மதக் குறி சாதிசம யக்குறி மற்றுமுள
மக்களைத் தாழ்த்திடும் குறி
மக்களைத் தற்குறிக ளாக்குவது மல்லாமல்
மடையர்கட் கோர் அறிகுறி
விதிப்படி முறைப்படி சாத்திரபு ராணங்கள்
வேதமிதி காசத்தின்படி
விற்தொழுகும் ஆண்குறி பெண்குறி என்று நம்
மிஸ்மேயோ சொன்னதின் படி
மிதிப்படிக் கல்லையோர் தெய்வமெனக் கொண்டு மண்
மீதினில் சிலையுருக்குறி
வீணாக நெற்றியில் விபூதிநா மக் குறிகள்
வேற்றுமை புகுத்திடும் குறி
பொதுக்குடி ஜனங்களை ஒருப்புற மொதுக்கிடும்
பூணூல் மூடத்தனக் குறி
புத்தியைக் கெடுத்திடும் இக்குறி யனைத்தையும்
போக்குவது நீதிமாதோ

திருச்சியில் சுயமரியாதை விதவா விவாகம்.

தென்னூரில் திரு. பழனிச்சாமிப் பிள்ளை பங்களாவில் சித்தோடு மருதாசலம் ஆச்சாரியின் 25 வயதான குமாரர் டாக்டர் கிருஷ்ணசாமிக்கும் கோபிசெட்டிபாளையம் வெங்கடாசல ஆச்சாரியின் 24 வயதுள்ள குமாரி திருவாளர் செல்வி தாயம்மை அம்மாளுக்கும் "விதவா" விவாகம் நடைபெற்றது. விவாகச் சடங்குகள் பார்ப்பனப் புரோகிதரில்லாது சுயமரியாதை முறையில் நடைபெற்றது. நகரிலுள்ள பிரமுகர்களும் அநேக மாதர்களும் வந்திருந்தனர். இவ்வூர் விதவா விவாக சபைத் தலைவர் திரு. ராஜகோபால் பாரதி விவாகத்தை பாராட்டிச் சீராட்டிப் பேசி தம்பதிகட்கு புத்தகங்களும் பட்டாடையும் வெகுமதி யளித்தார். பின்னர் எல்லோருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. படங்கள் பிடிக்கப் பட்டன.

பொதுக்கூட்டம்

விவாகம் நடந்தேறியதும் நகர் ஹாலிற்கு முன் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதற்கு திரு. எஸ. ராமநாதன் தலைமை வகித்தார். கூட்டத்திற்கு மணமக்களும் வந்திருந்தனர். நகரின் சார்பாக திருவாளர்கள் ஆள்வார் செட்டி, வேணுகோபால் நாயுடு, சோமசுந்தரம், விஸ்வநாதம் பாலகிருஷ்ணன் [மதுரை) வாசுதேவன், சுவாமி சதாநந்தா, கிருத்திவாஸ, மாசிமலை ஆச்சாரி, கோவிந்தராஜுலு நாயுடு பிச்சைமுத்துப் பண்டார் முதலியோர்களும் ஜில்லா சுயமரியாதைச் சங்கமும் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் விதவா விவாகசபை வாலிபர் சங்கம் ஆதிதிராவிட சபை பாடசாலை மாணவர்கள் தமிழர் சீர்திருத்தச் சங்கம் சித்தர்சங்கம் ஈரோடு வாலிபர்கள் விஸ்வபிராமணர்கள் மருத்துவ குல சங்கம் முதலியவைகளும் மணமக்களை ஆசீர்வதித்து அவர்கள் செழிப்புடன் வாழவேண்டுமாய் வாழ்த்தினர். பல பிரமுகர்களிடமிருந்து வாழ்த்துத் தந்திகளும் வந்தன. மணமகள் இரண்டரை ஆண்டுகட்கு முன் தன் புருஷனை இழந்து விட்டவர் மணமகன் பொது ஜனங்கட்கும்தங்களை வாழ்த்திய நண்பர்களுக்கு வந்தனமளித்தார்.

வருந்துகிறோம்.

கொங்கு வேலாள குல திலகரும் பொது நல சேவையில் ஊக்கமும் பற்றும் கொண்டவரும் நமது நண்பருமான சேலம் ஜில்லா புதுப்பாளையம் ஜமீன்தார் உயர்திரு. ரத்தினசபாபதிக்கவுண்டர் அவர்கள் திடீரென மரண மெய்தியதைக்கேட்டு பெரிதும் விசனிக்கிறோம். அவரது குடும்பத்தினருக்குநமது அநுதாபத்தைத்தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

போடி நாயக்கனூர் சுயமரியாதைக்கு ஜே!

ஒரு நிருபர்

திருமலாபுரம் சுயமரியாதை வாலிப வீரர் காலம் சென்ற திரு. ஆர் ஆறுமுகம் அவர்களையும், அவர் சோதரர் திரு. ஆர். மாரிமுத்து அவர்களையும், வேறு பலரையும் அடித்து மளிகையிலுள்ள சரக்குகளையும் வாரி இறைத்துச் சூரையாடிச்சென்றதோடின்றி சுயமரியாதை இயக்கத்தையும் அதில் கொண்டாரையும் வைது கஷ்டப்படுத்திய ஆ. சின்னைய நாடார் வகையராப் பெயர்கள் பதின் மூவர்மீது பெரியகுளம், சப்மேஜிஸ்டிரேட் இடம் வழக்குத் தொடுக்கப் பட்டு பல மாதங்கள் நடைபெற்று, இன்று அவ்வெதிரிகளில் ஐவருக்கு தலைக்கு நூறு ரூபாய் அபராதமும், அபராதம் கட்டத்தவறின் ஒரு மாதக் கடுங்காவல் தண்டனையும் எண்மருக்கு தலைக்கு ஐம்பது ரூபாய் அபராதமும் அபராதம் கொடுக்க மறுக்கின் மூன்று வாரக் கடுங்காவல் தண்டனையும், அனுபவித்தல் வேண்டுமெனத் தீர்ப்புக் கூறப்பட்டது.

சுயமரியாதை சார்பாக சுயமரியாதை வழக்கை யாதொரு பயனும் கருதாது வழுவற நடாத்தி வெற்றியுறச்செய் வழக்கறிஞர் திரு. பி. டி. தேவார் B. A. B. L. அவர்களை மனமாற போற்றுதார் இல்லை. சுயமரியாதை வீரர்கள் அடியுண்ட அன்று ஆர்பரித்த வைதீகக் குடுக்கைகளத்துணையும் நம் நீதிமிக்க அரசாங்கத்தாரின் இன்றைய அறத் தீர்ப்பு கண்டு இருந்த இடந் தடந்தெரியாதொருந்தனர்.

பார்ப்பனீயமொழிந்த பிரதம திதி.

வேலூர் சைதாப்பேட்டை, முனிசிபல் ஆஸ்பத்திரி, டாக்டர் வே. முருகேசன் அவர்களது காலஞ் சென்ற அருமை மனைவியார் மீனம்பாள் அவர்களது பிரதம திதி 6—2—30-உ யில் பிராமணீயமின்றி சுயமரியாதை முறையில் நடைபெற்றது. அதுசமயம் சில ஏழை மக்களுக்கு அன்னமளித்ததோடு தன் வீட்டில் வேலை செய்யும் ஆட்களுக்குச் சேலையும் வேஷ்டியும் வழங்கினர்.

சுயமரியாதை மகாநாடு ஈரோடு.

ஈரோட்டில் நடக்கும் 2-வது மாகாண சுயமரியாதை மகா நாட்டுக்கு இதுவரை ரூ. 2000 வசூலாகி இருக்கின்றது,

---

மூட்டைப்பூச்சிகளுக்கு எமன்.

எந்தச் சந்துகளில் ஆயிரக்கணக்கான மூட்டைப்பூச்சிகளிருந்து கொண்டு இரவு பகல் நம் இரத்தத்தை உறிஞ்சினாலும் இந்த மருந்து பட்டமாத்திரத்தில் அவ்வளவும் அச்சணமே அழிகிறது.

2 அவுன்சு பாட்டல் ரூ. 1.

தேள் விஷங்களுக்கு எமன்.

வாதத்தேள் பித்தத்தேள் சிலேத்துமத தேள் உச்சிலிங்கத்தேள் நட்டுவாக்களி இதுகள் கடித்த கடிவாயில் மருந்தைப்போட்டு பின் புகையைபிடிக்க அந்தக்ஷணமே சிறிப்பதை பார்க்கலாம்.

3 மருந்துகள் ரூ. 1.

கா. வே. வேலுமயில்,
மயிலர் திருமாளிகை
காங்கயம்.

மதுரை முனிசிபாலிட்டி
டெண்டர் நோட்டீஸ்.

இந்த முனிசிபாலிட்டிக்குவிறகுசப்ளை செய்வதற்கு சீல் போட்ட டெண்டர்கள் தேவை. அந்த விறகு ரயில்வே, வேபிரிட்ஜுக்கு 3,மைல் தூரத்திலுள்ளகொச்சடை தண்ணீர் சப்ளை பம்பிங் ஸ்டேஷனில் ஒரு பாகமும்,ஒரு மைல் தூரத்திலுள்ள அரப்பாளையம் தண்ணீர் சப்ளை பம்பிங்ஸ்டேஷனில் ஒரு பாகமுமாக வாடகை யின்றி கொண்டுவந்துபோடவேண்டும்.

2. விறகுகள் நன்றாய்க் காய்ந்ததாயும், சேகேரியதாயும், இரண்டரை அங்குல குறுக்களவிற்குகுறையாததாயும், ஆறு அங்குலத்திற்கு அதிகப்படாததாயும், இரண்டு அடி நீளமுள்ளதாகவும் இருக்கவேண்டும்.

3. இதற்கு வேறுபட்ட அளவுள்ளதும் கணுவுள்ள மரமும் கண்டிப்பாய் தள்ளுபடி செய்யப்படும்.

4. 1930—31 அபிஷியல் வருஷத்திற்கு வேண்டிய விறகு அளவு கொச்சடை ஸ்டேஷனுக்கு 400- டன் என்றும், அரப்பாளையம் ஸ்டேஷனுக்கு 200டன் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. அந்தப்படி சப்ளை செய்வதில் அப்போதைக்கப்போது கொடுக்கப்படுகிற உத்திரவுப்படிகொஞ்சங் கொஞ்சமாய் சப்ளை செய்யவேண்டும்,

5. டெண்டர்தார்,டெண்டரின்மேல் "1930—31 ளுத்துக்கு விறகு சப்ளை செய்ய டெண்டர்"என்று தெளிவாய் எழுதி ரூ. 100 டிபாசிட் தொகையுடன்1930-ளு பிப்ரவரி-மீ 25-உ மாலை 5 மணிக்குள். கீழ் கையொப்பமிட்ட எனக்குக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும். டெண்டர்தாருக்கு முனிசிபாலிட்டியினால் எவ்வளவு தொகை கொடுக்கப்படவேண்டியிருந்தாலும், எந்தக் காரணத்தைக் கொண்டும்அதை டிபாசிட்டுக்காகஉபயோகித்துக்கொள அநுமதிக்கப்படமாட்டாது, டெண்டர்கள் பைசல் செய்யப்பட்ட ஒரு வார வாய்தாவில் தேர்ந் தெடுக்கப்பட்ட டெண்டர்தார் மறுபடியும் ரூ,200 டிபாசிட்டு கட்டுவதோடு, தன்னுடைய சிலவில் ஒரு ஒப்பந்தப் பத்திரமும் எழுதிக் கொடுக்கவேண்டும். அப் பத்திரத்தின் நகல் ஆபீசில் கிடைக்கும். அந்தப்படி செய்யத் தவறினால்ஒப்பந்தம் ரத்து செய்யப்படுவதோடு டிபாசிட் தொகையும் பறிமுதல் செய்யப்படும்.

6, எல்லா டெண்டர்களையுமோ, அல்லது சிலவற்றையோ, யாதொரு காரணமும் காட்டாதுதள்ளிவிடுவதற்கு இந்த சபைக்கு பூரண அதிகாரம் உண்டு,ஏற்றுக்கொள்ளப்பட்ட டெண்டர்தார் விறகு சப்ளை செய்வதற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட ரசீது யெல்லாம் தனிக்கை செய்யப்பட்ட பிறகே டிபாசிட் தொகை வாப்பீஸ் செய்யப்படும்,

முனிசிபல் ஆபீஸ்,
28-1-30
மதுரை.

ஆர். எஸ். நாயுடு,
சேர்மென்.

(3-த் பக்கத் தொடர்ச்சி)

வினை ஒப்பு, அறவொழுக்கம் என்னும் தடபுடலான நாமங்கள் உண்மை அறிவியின் சிறு திவலைகளிலும் நனையாதன என்றும் ஒழுக்கம் ஆத்மார்த்தம் எல்லாம் குடும்பப்பரம்பரை தருமத்தை ஒட்டியதென்றும் இன்னும் என்னென்னவோசொல்லுவோர்க்கும்விளங்காதனவற்றைக் கேட்போற்கும்சொல்லுவதில் பலனில்லை.

அறவொழுக்கம் இருவினை ஒப்பு, மலபரிபாகம் கைவரப்பெறும் வாழ்க்கைக்கு வாழ்க்கைப்பட்டு மிதுனத்திற்கு மேற்பட்ட தத்துவம் விளங்க வேண்டிய வாசல் புகுந்த திருவாடுதுரை மடத்து அதிபதியான சிவபதம் சென்ற சுப்பிரமணிய தேசிகர் சமய ஒழுக்கத்தில் சிறந்தவரெனக் கேள்விப்பட்டதுண்டு. சித்தியார் வாக்கைப்படித்து திருவைந்தெழுத்தை உருப்போட்டு சிவலிங்கத்தைத்தினம் தெரிசிப்பவர்களான சைவர்கள் இத்தனையும் நம்பாமல் சென்னை டாக்டர் ராபாட்லன்இடம் அவரைஒப்படைத்ததாகக் கேட்டோம். மிதுனத்திற்கு மேற்பட்ட தத்துவத்தின் ஈஸ்பர நிச்சயமிதுதானா?

திருப்பதிப் பெருமாளிடம் சமஆசனத்திலிருப்பவர் திருப்பதிமகந்து மிதுனத்திற்கு மேற்பட்ட தத்துவமுடைய இடத்திற்கு பாகவதர்களை அனுப்ப அதிகாரம் பெற்றவர். எல்லாப் பாவங்களையும் தீர்க்கும் தீர்த்தமும் கல்லாகவேனும் புல்லாகவேனும் திருப்பதி மலையில் பிறப்பவர்களையெல்லாம் வைகுண்டத்திற்கு அனுப் கொண்டிருக்கும் திருப்பதி மலையை விட்டு மருந்துவை "மிலேட்சர்களுடைய" மலையான சென்னைக்கும், அங்குள்ள குழாய்த்தீர்த்தத்திற்கும், இங்கிலீஷ்ஆகாரப் பிரசாதத்திற்கும், அதைப் பக்குவமாகக் கொடுக்கும் அர்ச்சகர்களான இங்கிலீஷ் தாதிகளிடமும், அவைகளின் கணக்கைக் கணிக்கும் டாக்டர் மால்காம்சனிடம் ஒப்படைத்து விட்டார்கள்.பெருமாள் திருப்பதிமலைத் தீர்த்தம், வெண்பொங்கலும் புளியோதரையும் தின்று திண்ணையில் பரலோகத்தை பார்த்துத் தூங்கும் பாகவதாள் கோஷ்டி இத்தனையிலும் நம்பிக்கை யிழந்ததையும் கண்டோம். இதுதானா பெருமாள் கடாட்சம்.

தேக வாழ்க்கையும் பிரபஞ்ச காரியங்களும் அனித்தியமென்றும் சமய நிர்வாகியான சங்கராச்சாரி அவர்கட்கு சிறிது காலத்திற்கு முன் தேகத்திலும் மனதிலும் சிறு கோளாறு ஏற்பட நித்தியமான இங்கிலீஷ் மருந்தும் அதன் வைத்தியர்களும் வேண்டிவந்ததாகப் பத்திரிகையில் படித்தோம். சிவ பக்தர்களும் வைணவ பாகவதாளும் சிறிது பணமிருந்தால் தாங்கள் குடியிருக்கும் க்ஷேத்திரவிசேடம், மூர்த்தியின் மகத்துவம், தீர்த்தமகிமை, பிரசாத அனுக்கிரகம் ஓதின தாறகம், உருப்போட்ட ஐந்தெழுத்து, ஆச்சாரிகள் பாடின பாட்டு, ஸ்தலபுராணவாக்கு இவையெல்லாம் கேட்டுக் கேட்டுத் தளும்பேரிய மனம், பக்தியில் உறுதின உள்ளம் இத்தனையிலும் நம்பிக்கை யில்லாது போட்டுவிட்டு சென்னையிலிருக்கும் டாக்டர் ரெங்காச்சாரி. டாக்டர் குருசாமி இவர்களிடம் போவது மிதுனத்திற்கு மேற்பட்ட எந்தத் தத்துவத்தைப் புலப்படுத்திக் கொள்ளுவதற்காகவோ.

மிதுனமென்றால் சேர்க்கை, புணர்ச்சி என்பது பொருள். மீன், ஆடு, மாடு தின்பவர்களுக்கு ஆணும் பெண்ணும் சேர்ந்து செய்யும் புணர்ச்சியான காமசுகத்தைத்தவிர அதற்கு மேற்பட்ட தத்துவங்கள் புலப்படாதென்று கருதியேசபையில் மேஷ ரிஷபங்களைத் தின்பவர்கட்கு மிதுனத்திற்கு மேல்பட்ட தத்துவம் புலப்படாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. பால், நெய், துவரை, கடலை, உளுந்து, மொச்சை பட்டாணி. வெங்காயம், வெள்ளைப் பூண்டு. பெருங்காயம். அவரக்காய், முருங்கக்காய், வெண்டக்காய், சாம்பப் பூசனிக்காய், சுரக்காய், சொக்காக்கீரை, அரக்கீரை, முள்ளங்கி, மொட்டக்கோஸ், உருளைக் கிழங்கு, சேனைக் கிழங்கு முதலியவைகள் இந்திரியங்களை விருத்திசெய்யும். ராசத குணப் புசிப்பென்று தள்ளி உண்கிற சைவர்களுக்கும் தள்ளாமல் உண்கிற சைவர்களுக்கும் வைணவ அய்யங்கார்களுக்கும் சுமார்த்தப் பார்ப்பார்களுக்கும் மிதுனத்திற்கு மேற்பட்ட தத்துவம் எத்தினை புலப்பட்டிருக்கிறதென்பதைத் தூத்துக்குடி சைவ சபையோர்களே! சொல்லி விடுங்கள். மீன், ஆடு. மாடு தின்பவர்களைவிட மிதுனத்திற்கு மேற்பட்ட தத்துவம் விளங்குகிறவர்களிடம் சூது தன்னலம் நம்பிக்கை யில்லாமை அதிகம் காணும் காரணத்தையும் தெரிந்து நமதுதெய்வங்களும் தேவர்களும்கூட பூலோகத்தில்எதாவது ஒருகாரியார்த்தமாக வந்தால் அதைநிறைவேற்றுவதற்குச் சூதும்வஞ்சனையும் செய்யவேண்டி இருப்பதோடு அதுசமயம்பார்ப்பாரவேஷமும்பண்டாரஉடையுமே எந்தரிக்கின்றனஎன்பதையும் சொல்லிவிடுங்கள்.

மீனமேஷ ரிஷபங்களைத் தின்னும் ஐரோப்பா நமது கண் முன்னே பல நூற்றாண்டுகள் வருந்தி சித்திபெற்று விடுதலையின் கொடியைத் தூக்கிக் காட்டுகிறது. கொள்கையில் விடுதலை, செய்கையில் விடுதலை, யோசனையில் விடுதலை, கலையிலும் இலக்கியத்திலும் ஆதாரங்களிலும் விடுதலை. அந்த ஐரோப்பாவில் தன்னலமான அகங்காரமும் ராஜதஸ்திரீகளின் நயமான முழக்கங்களும் செழிப்படைந்த தந்திரமும் தலை எடுத்திருக்கும் இந்த நாளில் கூட நமக்குச் சுயராஜியம் கொடுப்பதற்காக வட்டமேசை மகாநாடு கூட்டிப் பேசுவதற்கு நம்மையெல்லாம் அழைக்கிறார்கள். நாமோ கையைப் பிசைந்து கொண்டு கடவுள் எல்லாருக்கும் பொது வென்பதைமறந்து வீட்டிலே மூத்தவன் பணக்காரன், அதிகாரமுடையவன், கோவில், குருக்கள், பூசாரி, புரோகிதன்முதலியவர்களில் ஏதேனும் ஒன்றைப் பூசை பண்ணி நம்முடைய சொந்த யோசனையையும் சொந்தச் செய்கையின் திறமையையும் தூளாக உடைத்து நான்கு பக்கத்துக் காற்றிலும் வீசி யெறிந்து விட்டு உலக முழுதும் தழுவிய மாற்றொணாத ஸர்விதியை நம்பாமல் சாஸ்திரமென்றும் சமயமென்றும் சொன்னதையே சொல்லி படித்ததையே படித்து ஒரு தீட்டைத் தீர்ப்பதற்குத் திண்டாடுகிறோம்.

மீன், ஆடு, மாடு தின்னும் ஐரோப்பா உண்மையை மனதுக்குள் அடைத்துவைக்காமல் வழக்கத்தில் காட்டுகின்றன. ஜனக்கட்டிலும் ராஜ்யத்திலும் ஏதேனும் குற்றம் வெளிப்பட்டால் அதைப் பொது ஜனங்கள் உண்மை விளக்கால் சோதித்துத் திருத்த வழியுண்டு. இதனால் கிடைக்கும் சக்தியும் விடுதலையும் எல்லாருக்கும் பயன்பட்டு நம்பிக்கையையும் ஸ்தரியத்தையும்உண்டாக்குகின்றன. இந்த உண்மை மாய மந்திர இருளில் மறைந்து கிடக்கவில்லை. திறந்தவெளியில் எல்லாரும் காணும்படி தானும் வளர்ந்து பிறரும் வளரும்படி செய்கிறதுநமக்கோ மீனத்திற்குமேற்பட்ட தத்துவம் எதற்கும் விளங்க வேண்டும். வெறும்பேச்சு ஞானமாகாது அது வாசா கைங்கரியமே கிளிகளும் அவ்வாறு பேசும். நாம் புஸ்தகத்தில் படித்ததை 'சொல்லுவது போல கேட்டதை இக்காலத்தில் யந்திரங்களும் பேசுகின்றன. வைராக்கியம் உபரதி, ஆத்ம ஞானம், பொறை, சமசிருஷ்டி, அளவுகடந்த அன்பு இவற்றைப்பெற்ற சமயவாதிகள் எத்தனை பேர்களிருக்கிறார்கள் என்பதை கவனித்துப் பாருங்கள் நமது தெய்வங்கள் ரிஷிகள் ஆசாரிகள்பெரியவர்கள் ஆகியஎல்லோருமே மிதுனத்தின்தத்துவத்தைமுடிப்பதற்கேஇவ்வுலகத்தில்விளையாடிக்கொண்டிருந்ததாக இதிகாசங்களிலும் பெரிய புராணங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றன இதில் விடப்பட்டதை பின் வியாசத்தில் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன்.

உதிர்ந்த மலர்கள்

புராணங்களுக்கு மதிப்பு ஏற்பட்டதற்கு காரணம் என்னவென்றால் அவைகள் எவ்வளவு ஆபாசமாகவும் காட்டு மிராண்டித்தனமாகவும் எழுதிஇருந்தாலும் முதலிலும் கடைசியிலும் "இப்புராணத்தைப் படித்தோருக்கு மோட்சம் படிக்க வைத்தோருக்கு மோட்சம் கேட்டோருக்கு மோட்சம் கேட்டவரைக் கண்டோருக்கு மோட்சம் கண்டவரைக் கண்டவரைக் கண்டால் மோட்சம்" கிடைப்பதுடன் வாழ்கையில் பணமும் பொருளும் சேருமென்றும் செத்த பிறகு இராஜாவாய பிரபுவாய் மறுஜன்மம் எடுக்கப்படும்" என்றும் எழுதி வைத்ததே காரணமாகும்.

ஈ. வெ. ரா.

ஃ ஃ

எவனொருவன் கடவுளிடத்திலும் அதைப் பற்றிச் சொல்லும் மதக்கொள்கைகளிடத்திலும் பூரண நம்பிக்கை வைத்து எல்லாக் காரியங்களும் அவைகளுடைய செயல்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றானோ அவன் பூரணசுயேச்சை என்னும் பதம் வாயினால் உச்சரிக்கக்கூட யோக்கியதை அற்றவனாவான்.

ஈ. வெ. ரா.

ஃ ஃ

புராணங்களின் ஆபாசங்களை நன்றாய் உணர்ந்தவர்கள் எல்லாம் அவற்றை வெளியில் சொல்லுவதற்கு பயப்பட்டுக்கொண்டிருந்ததற்கு காரணம் என்னவென்றால் பார்ப்பனர்கள் தனக்கு நாஸ்திகன்என்றுபட்டம் கட்டி ஒழித்துவிடுவார்கள் என்கின்ற பயம்தான். ஈ. வெ. ரா.

ஃ ஃ

ஜாதிமதவித்தியாசங்களும்அவற்றின் உயர்வு தாழ்வு நிலைகளும் சிறிதும் அழியாமல் அப்படியே இருக்கவேண்டும் என்று சொல்லுகின்றவர்கள் ஜாதிகளின் பேராலும் மதங்களின் பேராலும் கேட்கப்படும் விகிதாச்சார உரிமைகளை ஏன் ஆட்க்ஷேபிக்கின்றார்கள் என்றும் அப்படி ஆட்சேபிப்பதில் ஏதாவது நல்ல எண்ணமோ நாணயமோ நியாயமோ இருக்க முடியுமா என்றும் தான் கேட்கின்றேன்.

ஈ. வெ. ரா.

அறிவிப்பு.

கடிதம் எழுதும் சந்தா நேயர்கள் தவறாமல் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதவேண்டும். சந்தா நம்பர் தெரியாத புதிய சந்தாதாரர்கள் தாங்கள் பணம் கட்டி சேர்ந்த மாதம், தேதியையாவது கட்டாயம் குறிப்பிட்டு எழுதவேண்டும்.

ப—ர்

பெண் தேவை.

கவர்மெண்டில் மாதம் 90 ரூபா சம்பளமும், 29 வயதும் தமிழ், இங்கிலீஷ் கற்றவருக்கு 16 வயதிற்குட்பட்ட அழகிய பெண் தேவை எந்த ஜாதியாயினும் சரி. படத்துடன் அடியில் கண்டவிலாசாதிற்கு எழுதவும். சுயமரியாதைக் கொள்கைப்படி திருமணம் செய்யப்படும்.

M. Thangaveloo
Assistant Foreman
Govt Central Press
Bombay.

ஜனங்களுக்குச் சந்தோஷத்தைத் தரும்

ஜனோபகாரி தைலம்.

இத்தைலமானது 27 வகையான மூலிகைகளால் செய்யப்பட்டது. அநேக நற்சாட்சிகள் பெற்றது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

நல்ல குளிர்ந்த வாசனையுள்ள தைலம்.

இத்தைலத்தால் தீரும் வியாதிகள்:- தீராத தலைக்கனம், ஓயாத மண்டையிடி, ஒருதலைக்குத்து, தலையரிப்பு, முடிசழிதல் இவைகளை நீக்கிக் கூந்தலை வளரச் செய்யும். காதிரைச்சல், காதடைப்பு, குத்தல், கணைவலி, எரிவு, கூச்சம், நீர்வடிதல், சிகப்பு விழுதல், நாசியிலிருந்து மஞ்சள்நிறத் தண்ணீர்வடிதல், ஓயாத தும்மல், சிராபோல் விழுதல், வாய்க்கசப்பு, புளிப்பு, துர்க்கந்தமடித்தல் முதலிய வியாதிகள் நீங்கி தேகத்திற்குச் சுகம் உண்டாகும். கண்டத்துக்குமேல் ஏற்படக்கூடிய 96 வியாதிகளும் தீரும்.

பெரிய டின் ரூ. 1—12—0 | தபால் சார்ஜ் வேறு.
சிறிய டின் ரூ. 1— 0—0 |

பார்சவாய்வு மருந்து.

விதை வாய்வு, நரம்புத்தடிப்பு, வலி, வீக்கம் முதலிய விதை சம்மந்தமான சகல வியாதிகளுக்கும் இந்த மருந்தை உபயோகியுங்கள். பத்தியம் கிடையாது. பெண்கள் அண்டவாய்வுக்கும் உபயோகிக்கலாம்.

14 வேளை மருந்து ரூ. 1—0—0, தபால் சார்ஜ் வேறு.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளிநாட்டு நேயர்கள் வி. பி. செலவு சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும். நீங்கள் கடிதம் எழுதும்போது தெளிவாய் அச்செழுத்தைப்போல இங்கிலீஷிலோ தமிழிலோ எழுதவேண்டும். சோல்ஏஜண்டுகள் தேவை. விபரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளவும்.

உ. கா. நாகூர்மீரா அன் பிரதர்,
7-வது தெரு, ஏர்வாடி போஸ்டு,
(14) திருநெல்வேலி ஜில்லா, [தென்னிந்தியா.]

பொம்பாய் ஜரிகை சேலைகள்.

எங்களிடம் 10, 12, 14, 16; 18 முழங்களில் பலவிதமான ஜரிகை வேலை செய்த புது மாதிரியான பியான்வி வாயில் சேலைகளும் அசல் சில்க் சேலைகளும், வெல்வெட்டின்பேரிலும், சில்க்பேரிலும் ஜரிகை வேலை செய்த, ரவிக்கைகளும், ஜாகீட்களும், பிராக்குகளும், குறைவு விலை முதல் ஜாஸ்தி விலை வரையிலும் கிடைக்கும். மொத்தமாயும் சில்லரையிலும், வியாபாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் அனுப்பப்படும். வேண்டியதற்கு உடனே எழுதுங்கள். கடிதங்கள் தமிழிலும் எழுதலாம்.

B. K. BALASUNDARAM NAIDOO & Co.,
Gopalpuvan Princes Street,
"Tel Address"—Mahavishnu BOMBAY. 2

இதுவரையில் தமிழில் வெளிவராத புஸ்தகம்

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன்



அநுபோகப்பயிற்சிமுறையும்
விலை ரூபா 1—8—0
(தபால் சார்ஜ் வேறு)
வெளிநாட்டு ஆர்டர்களுக்கு
முன் பணம் அனுப்ப வேண்டும்.

மோட்டார் ஸ்கூல் (1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)

இங்கு 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிஸம் கற்றுக் கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர், சென்னை
(11)

கடவுள் கடவுளென காசைத்
தொலைக்காதே

ஏழு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்த வைத்திய சங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர் !!!

மூப்பு சேர்ந்த மருந்துகள்.

நீங்கள் என்றுமழியாத இளமைப்பருவத்தை அடைய வேண்டுமானால் பழனி சி. எம். சாமி

மகா வீரிய தங்க பஸ்பம் சாப்பிடுங்கள்....

தாதுபுஷ்டியில் மன்மதனுக் கொப்பாவீர்கள். பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

தாதுபுஷ்டியில் சிகரற்றது. மகான் அருளால் கிடைக்கப்பட்டது. வெள்ளை, வெட்டை, கடுப்பு, பவுத்திரம், மூலம், நீரழிவு க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், சூலை, முதலிய வியாதிகளும் நீங்கும். அழிந்துபோன ஆண்மையையும் இழந்த பலத்தையும் இல்லற வாழ்வில் இன்பத்தையும் கொடுத்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வயோதிகனை வாலிபனாக்கி சதா பரமானந்தத்தை கொடுக்கக்கூடிய அபூர்வ சக்தி இருப்பதால் இதன் அரிய குணத்தைக் கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை. ஒரு முறை உபயோகித்தால் உண்மை விளங்கும்.

48 நாள் பஸ்பம் ரூபா 20—0—0. 24 நாள் பஸ்பம் ரூபா 10—0—0.

குரு அப்ரேக் செந்தூரம்- நீரழிவுக்கு.

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேக வெளுப்பை மாற்றி ரத்த விர்த்தியையும், தேக புஷ்டியையும் தரும். சகல மேகமும். க்ஷயரோகமும் நீங்கும். தளுக்கற்றது. 24 நாள் புட்டி 1-க்கு ரூ. 15.

குரு தாளக பஸ்பம்-இருமலுக்கு

க்ஷயம், ஈளை, இளைப்பு இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கண்டது. 24 நாள் புட்டி 1-க்கு ரூ. 8.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

அந்நிய தேச வாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும் போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழநி, S. I.

உயர்வும் உத்திரவாதமுமுள்ளது!

உலகப் பிரசித்தி பெற்ற

மாயவரம் R.S. கிருஷ்ண அண்டுகோ.

ஸத்குரு சிங்கச் சந்தனுதித் தைலம் பிருங்காமலகத் தைலம்
அரைக்கீரை விதைத் தைலம்.

முதலியவைகளே! உங்கள் கண்ணுக்கும் மூளைக்கும்குளிர்ச்சியைத் தந்து திரேக ஆரோக்கியத்திற்கு குணம் தரத்தக்கது.

இவைகளைப் பல வருஷங்கள் அநுபவமுடைய தேர்ந்த நிபுணர்களால் உயர்ந்த பச்சிலை மூலிகைகளை கொண்டு ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இவைகளை ஸநானம் செய்து வருவதால் சிரசைப்பற்றிய நோய்களைப் போக்கி திரேகத்திற்கு குளிர்ச்சியையும், நருமணம்புகம்பும் சுகந்த ப்ரிமள வாசனையையும் கொடுக்கத்தக்கது.

அநேக பெரிய மனிதர்களாலும், டாக்டர்களாலும், பத்திரிகாசிரியர்களாலும், தேசிய மாபெரும் தலைவர்களாலும் உபயோகித்துச்சிபார்சு செய்யப்பட்டவை.

ஒரே முறை பரீட்சியுங்கள், பரிட்சைக்கு உத்திரவாதமுள்ளது.

மலாய் நாட்டில் கிடைக்குமிடம்:—
பி. கோவிந்தசாமி பிள்ளை,
48-50, சிரங்கன் ரோடு,
சிங்கப்பூர்.

ஆர். சந்தானகிருஷ்ணன்
ஷாப் அண்டு சந்தணக்கடை,
மாயவரம்.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

சர்: டோராப் ஜே டாட்டா. Kt.

மூலதனம்:

அனுமதிக்கப்பட்ட மூலதனம்	...ரூ.	6,00,00,000.
பதிவு செய்யப்பெற்ற ,,	... ரூ.	3,56,05,275,
வசூலான ,,	... ரூ.	71,21,055.

இதைப்பற்றி 1929 ஜூன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது:

"நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தை கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்டெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமை உண்டு"

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மேரைன், மோட்டார்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜென்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சு மானேஜர்,
4, முதல் லைன்பீச், சென்னை.

குடி அரசு புத்தகாலயம்.

மேயோ கூற்று மெய்யா பொய்யா	0—4—0
ஞானசூரியன் (அச்சில்)	.
இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம்	0—4—0
மனு நீதி மருமம் ...	0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ...	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு. ...	0—2—0
சோதிடப் புரட்டு. ...	0—2—0

8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, 5 ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

நிமிஷநேரத்தில் குணமடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறீர்?
அபூர்வ சிகிச்சை! இதை—சாதனை செய் ஆச்சரிய நிவர்த்தி!

சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினுல் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்ருய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது.

தபால் கூலி அணு. 4. ஒரு டஜன் டின் விலை ரூ. 9—0—0
6 டின் விலை ரூ. 5—4—0 3 டின் விலை ரூ. 3—0—0.
F. M. S. முதலிய ஊர்களுக்கு முன்பணம் ரூ. 2—8...0.
இல்லாத ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S.

அன்பையன்ஸ் கேம்பிரிட்ஜ்.

இன்ஸ்டிடியூட் நாசரேத் S. I. R.
ஸ்தாபன ஹூ 1920.

இளமையிற் படிக்கவில்லையென்று வருந்தவேண்டாம்.

தமிழ்வாசிக்க, எழுதத்தெரிந்த 100-பேர்கள் நமது ஸ்பெஷல் மெட்ரிக்குலேஷன் கோர்ஸுக்கு தபால் மூலம் படிக்க எடுக்கப்படுகிருர்கள். அவர்கள் சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட கேம்பிரிட்ஜ் சீனியர் பாஸ் செய்து காலேஜில் சேரலாம். அல்லது இங்கிலீஷ் உயர்தரப்பட்டங்களுக்கு இங்கிலாந்து, கொளும்பு, சிங்கப்பூர்களில் வாசிக்கலாம். லோயர், ஹையர் கிரேட் உபாத்திமார்களுக்கு அதிகப் பிரயோஜனமானது. தற்சமயஞ் செய்யும் தொழிலுக்கும் உத்தியோகத்திற்கும் யாதொரு இடையூறின்றி வாசிக்கலாம். தினசரி மாணவர்கள் சேர்ந்தவண்ணமிருக்கிருர்கள். உடனே பிராஸ்பெக்டசுக்கு ஒரு அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

டைரக்டர்.

"உண்மைவிளக்கம் பதிப்பகத்தில்" அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாளால் வெளியிடப்பட்டது.